தென்மொழி

வயங்கு தமிழ் வளர்ப்பதற்கு வன்முறை இயக்கம் ஒன்று தேவை!

மென்முறையாய் அன்போடும் அறிவோடும்
        மிகச் சொல்லி மேந்தமிழை வளர்க்கும் பாங்கைப்
பன்முறையாய் விளங்கவைத்தும் பயனில்லை;
        பாழ்மொழியும் பிழைமொழியும பல்கக் கண்டோம்!
என்முறையாய்ச் சொன்னாலும் எழுதியுண்ணும்
        எத்தர்களும் தாளகரும் இணங்க மாட்டார்!
வன்முறையாய் இயக்கமொன்று தேவையிங்கே;
        வணிகரையும் வம்பரையும் வயக்கு தற்கே!

நற்றமிழில் இல்லாத வணிகர்வரிப்
        பலகைகளைப் பெயர்த்தகற்றி நலித்தல் வேண்டும்!
சொற்றமிழில் பிழைசேர்க்கும் கலப்புமொழி
        எழுத்தாளர் இல்லங்களைச் சூழ்ந்து நின்று,
முற்றுகையிட் டவர்குற்றம் எடுத்துரைப்போம்;
        தாளிகைகள் நிலைமாற முறையாய்க் கேட்போம்!
அற்றெனிலவ் வெழுத்துகளைப் புறக்கணிப்போம்!
        தாள்களையும் குவித்தொருங்கே அனல்சேர்ப் போமே!

சுவடி : 18
ஓலை : 9
ஆசிரியர் பெருஞ்சித்திரனார்
விலை உருபா 1-2

www.thamizham.net - Free E book No 7520

நமக்கு வந்த மடல்கள்

0: 912: அன்புடையீர், உ.த.மு.க. பொறுப்புகட்கு பொறுப்பாளர்கள் அமர்த்தப்பட்ட விளக்கங்களைப் பார்த்தேன். முழுமையும் கீழ்நிலை எளியவர்கள் (பாமரர்கள்) புறக்கணிக்கப்பட்டு இருப்பது போல உள்ளது. எந்த ஓர் இயக்கமும் படித்தவர்களையோ, அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களையோ வைத்துக் கொள்கைகளை முழுமையாக மக்களிடம் பரப்பிவிட இயலாது.

ஆகையால்தான் தந்தை பெரியார் தம் இயக்கத்தின் பொறுப்புகளில் படிக்காதவர்களையே அதிகப்படியாக அமர்த்திஞர். ஆகையால் அவரது இயக்கம் தமிழகத்தையே ஆட்டிப் படைக்கும் அளவிற்கு மக்கள் மனத்தில் இடம் பிடிக்க முடிந்தது. ஆகையினுல் உ.த.மு.க. விற்குப் படித்தவர்களையோ அரசுப் பணியாளர்களையோ பொறுப்புகட்கு அமர்த்தாமல் ஏழை எளியவர்களை (பாமரர்களை)யே அருள்கூர்ந்து அமர்த்தம் செய்ய வேண்டுகிறேன். அன்பன்,

— **வே. பால்ராசு,** கி சே.இ. தூத்துக்குடி.

0: 913: பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம். பெரியார் விதைத்தவை நச்சு விதைகளென்றுல் பார்ப்பனர் விதைத்தவை என்ன விதைகள்? — பாக்களாலேயே கொடுக்கப்பட்டுள்ள இவ்வெதிர் அடி, கச்சிச் சின்னவாளுக்குத் தகுந்த அடியே. ஆனாலும் இவ்வடியும் போதுமானதுதானு?

திருக்குறளில் அறத்துப் பாலை மட்டும், அதிலும் முதல் நான்கு அதிகாரங்களை மட்டும் பள்ளிகளில் கற்றுக் கொடுத்தால் போதும் என்றும், காமத்துப்பாலை, இன்றைய திரைப்படங்களே தெளிவாகக் காண்பித்து விடுகின்றன என்றும் இதே சின்னவாள் திருவாய் மலர்ந்தருளியதை அடிக்கணக்குக்கு ஏன் எடுத்துக்கொள்ள வில்லை?

வேத உபநிடதங்களின் சாரம் என்று உயர்த்திப் பேசப்படும் கீதையைவிட உலக மக்கள் வாழ்வாங்கு வாழ்ந்திட முழுமையான வாழ்வியல் நெறியைக் காண்பித்து நிற்கும் திருக்குறளை இந்தச் சின்னப் பெரியவாள் கசடறக் கற்றிருப்பாரா என்றுல், உறுதியாகச் சொல்லலாம், கற்றிருக்க மாட்டார் என்று. கற்றவராயின், தம்மூடைய வெறுமையைத் தங்குதடையின்றி இவ்வாறு வெளிப்படுத்தியிருப்பாரா?

பிறப்பினுலேயே மக்கள் நான்கு பிரிவுகளாகப் பிரித்து வேற்றுமை பாராட்டுவது கீதை. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று பொதுமை நலம் பாராட்டுவது குறள். பிராமண 'நியம'த்துக்கென காப்பாற்றப்பட்டு வரும் காமகோடி மடத்திஞல் இப் பொதுமை அறத்தைத் தாங்கிக் கொள்ள மூடியுமா?

"உனது தொழிலைச் செய்வதற்குத்தான் உனக்கு உரிமை உள்ளது; அதன் விளைபயனை எதிர்நோக்குதற்கு உரிமை இல்லை" என்பது கீதை. விளைபயனை அறிந்து எதிர்நோக்காமல், எவ்வாறு ஒருவன்

(தொட[illegible]

www.thamizham.net - Free E book No 7520

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ்மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்
புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், (சிங்கை).
தென்மொழிமறை. நித்தலின்பனார், தென்மொழி ந. முத்துக் குமரனார்
தென்மொழி ப. துரையரசன், தென்மொழி. நா. இளமாறன்.
அமைச்சர்: அழ. இளமுருகன், அறி. இ.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி 18] தி. பி. ௨௦௧௩ மேழம் (ஏப்பிரல்-3ம்'82) [ஓலை: 9

வீரப்பன் வாயடங்க வேண்டும்!

'இந்து மதமெனும் இழிநிலை மதத்தில்
வந்து பிறந்தோமே'—என, நாம் வருந்திக்
கொண்டிருக் கையிலே, கொள்கையில் லாத
'பண்டுகப்' ஒன்று, மனம்மிகக் களித்தே
'இந்துநான்' 'இந்துநான்'—எனக்குரல் [எழுப்பிச்
சொந்தம் பேசிப் பார்ப்பன வீழ்சுவர்
முதுகால் தாங்கி முட்டுக் கொடுப்பது
இதுகால் வரையும் இல்லாத வியப்பே!

www.thamizham.net - Free E book No 7520

அந்த 'ஒன்று'தான் அமைச்சுப் பதவியில்
வெந்துகொண் டிருக்கும் 'வீரப்ப' மாண்பு!

'இருபதாம் நூற்றுண்டு எட்டப்பன்' என்னும்
பெருமையைப் பெற்ற பிறவியிப் பிறவி!

மூவாயிர மாண்டு மூண்டி யடித்துத்
தாவியும் திமிறியும் தாழ்ச்சியி னின்று
மீண்டுகொண் டிருக்கும் மீளாத் தமிழினம்
ஆண்டுகொண் டிருக்கும் ஆரியப் பிடியில்
மூச்சு முட்டிட முணகிய வாறும்
ஆச்சுஆச் செனவே அலறிப் பிடித்துத்
தலையைத் தூக்கிப் பார்க்கையில், தலைமேல்
உலையின் சமட்டியால் ஓங்கியடிப் பதுபோல்
வீரப்பன் என்னும் விழல்மகன் பார்ப்பனர்க்(கு)
ஈரப்பன் ஆகித் திராவிட இனத்திற்(கு)
எதிரியாய் முளைத்ததை என்னெனப் புகல்வோம்!
பதரினில் பதராய்ப் போனதப் பாழுரு!

கச்சிச் சின்னவாள் கருத்தை யறிந்து,அவர்
உச்சி குளிர்ந்திட உரைகள் தருவதை
வீரப்பன் தவிர வேறுயார் செய்வார்?
நேரப்பன் ஆகி உரைகள் நிகழ்த்துவார்?

'ஆரிய திராவிடப் பருப்புவே கா'தெனும்
வீரிய உரைத்திறன் யார்வாய் வெளிவரும்?
பார்ப்பன இனத்திற்குப் பரிந்து,முன் வந்தே!
ஆர்ப்பரித் தெழுந்த ஆத்தோல் புலியவர்!

நலத்தை விரும்பி நயவஞ் சகமாய்க்
குலத்தை வீழ்த்திடும் கோடரிக் காம்பு!
அறத்தைப் பேசி ஆரியம் வளர்க்கும்
திறத்தைக் கொண்ட திராவிடப் பிறழ்ச்சி!

அமைச்சுப் பதவியை ஆரியம் காத்திட
நமைச்சல் மனத்தால் நல்விலை போக்கிய
நல்ல 'வீடண' நாயக உருவம்!
'வல்ல' 'சுரிக்வ' வழிவழி மரபு!

பெரியார் அண்ணு பெயர்களைச் சொல்லியே
உரியவர் கொள்கையை உதைக்கும் பிரகலன்!
மருளைத் தீர்க்கும் மதிதரும் புகழ்திருக்
குறளைப் பழிக்கும் குறளர் கைத்தடி!
ஆரிய நச்சின் அளவறி யாத
சூரியக் கொழுந்து! தமிழ்திரி சுணங்கன்!

www.thamizham.net - Free E book No 7520

ஆயிரம் ஆயிரம் ஆண்டுக ளாக
வாயுரம் கொண்டும் வஞ்சகம் காட்டியும்
தமிழ்ப்பே ரினத்தைத் தாழ்த்தியும் வீழ்த்தியும்
சமழ்ப்புச் செய்த சாத்திரக் குப்பையைப் —
புராணப் புளுகை—வேதப் புரட்டினை—
அராவிக் காட்டிய அறிஞரை யெல்லாம்,
தமிழினங் காத்த தலைவரை யெல்லாம்,
அமிழாத அவரின் அறிவுரை யெல்லாம்,
சூறை யாடிய சுழிமகன்! தமிழினக்
கூரைமேல் திரியும் கொள்ளிக் குரங்கு!

பெரியார் அண்ணா பேரினங் காக்க
'உரைத்தவை நச்சுகள்' என்னும் உலுத்தனின்
கழுத்தில் சுற்றிய கருநாகப் பாம்பு!
கொழுத்த நாக்குடை பார்ப்பனக் குறும்பறை!

—அத்தனைப் பெருமைகள் அனைத்தும் படைத்த
சித்தனை—காஞ்சிப் பெரியவாள் 'சீடனை'—

நோக்கி இவ்வுரை நொந்து கூறுவோம்!
போக்கினை மாற்றிக் கொள்ளுக! புதியஓர்
ஆழ்வா ராகி அரற்றிட வேண்டாம்.
வீழ்வாரை வீழாது காத்திடல் வேண்டாம்!

இத்தனைக் காலமாய் இடர்ப்பல பட்டுச்
செத்த தமிழினம் சிந்திக்கத் தொடங்கிப்
பெரியார் என்னும் பெருமகன் தம்மால்
உரிய உரிமைகள் பெற்று, இனி உய்ந்திடும்
அரிய முயற்சியை, அமைச்சதி காரத்தால்
நெரியச் செய்திடல் வேண்டாம்! ஆரிய
நச்சர வத்தை நல்லபால் ஊற்றி
மெச்சி வளர்த்து, மீளவும் நம்மேல்
உசுப்பி விடுதற்கு உழைத்திட வேண்டாம்!
பசப்புரை கூறிப் பதவியைக் காத்தற்குப்
பார்ப்பனர் பாதம் பற்றிட வேண்டாம்!

போர்ப்பண் முழக்கிது! புறக்கணிக் காமல்
வீரப்பன் வாயடங்க வேண்டும், இனியேனும்
சீரப்பன் ஆகித் திகழ்ந்து சிறக்கவே!



www.thamizham.net - Free E book No 7520

உ. த. மு. க. செய்திகள்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், கழக அமைப்புகளில் மாவட்ட, வட்ட பொறுப்பாளர்களை அமர்த்துதல் தொடர்பாகக் கடந்த ஏப்பிரல் மாதம் 19-ஆம் நாள் புதுக்கோட்டை மாவட்டத்திலும், 20 திருச்சி 21 சேலம், 22 தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களிலும் 2-ஆம் சுற்றுச் செலவு மேற்கொண்டு, ஆங்காங்கு வந்திருந்த பேராளர்கள் தென்மொழியன்பர்கள், தமிழார்வலர்கள் ஆகியவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிப் பெரும்பாலான பொறுப்பாளர்களை அமர்த்தம் செய்துள்ளார். (பட்டியல் தனியே வெளியிடப் பெற்றுள்ளது.) அனைத்து மாவட்டச் சுற்றுச் செலவின் பொழுதும் தலைமைக்கழக அமைப்புச் செயலாளர் திரு. தென்மொழி ப. துரையரசன் உடனிருந்தார். புதுக்கோட்டை அமர்த்தக் கூட்டத்திற்குச் சிறப்பு அழைப்பாளர்களாகத் தலைமைக்குழு முதன்மை உறுப்பினர் தென்மொழி ந. முத்துக்குமரனார், அவர்களும், கோவை மாவட்டப் பொருளர் பா. ஆறுமுகனார் அவர்களும், திருச்சி மாவட்டச் செயலர் திரு. நாரா. மகிழ்நன் அவர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டையில் உ. த. மு. க. தொடக்க விழா:

புதுக்கோட்டைக்குப் பொறுப்பு அமர்த்தம் தொடர்பாகக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் வருவதைக் கேள்விப்பட்டவுடன், நெடுநாளைய தென்மொழி அன்பரும், பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே காரைக்குடி அழகப்பர்கல்லூரியில் 'தமிழ்ப்பாசறை' அமைத்துத் தென்மொழிக்கும் தனித்தமிழுக்கும் பெருந் தொண்டாற்றியவரும், இப்பொழுது புதுக்கோட்டையில் முருகப்பா ஆணித் தொழிற்சாலையில் ஒரு பங்காளராகவிருந்து தொழில் நடத்தி வருபவரும், பாவாணரின்பால் உள்ள பற்றினால் தம் பெயரையே அவர் பெயராக வைத்துக் கொண்டவரும் ஆகிய திரு. இரா. பாவாணன் அவர்கள்' புதுக்கோட்டையில் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க விழா நிகழ்ச்சி ஒன்றையே மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்து விட்டார். பாவலரேறு வரவைப் பெரிய அறிக்கைகள் வழியும், சுவரொட்டிகள் வழியும் அண்டை அயல் ஊர்களுக்கெல்லாம் தெரியும்படி நன்கு விளம்பரப்படுத்தியிருந்தார். ஏறத்தாழ எண்பது தொண்ணூறு தனித்தமிழ் அன்பர்களைக் கூட்டி, மளமளவென்று ஆக்கப்பணிகளில் ஈடுபட்டு விட்டார்

www.thamizham.net - Free E book No 7520

காரைக்குடியில் உள்ள சனதா கட்சிச் செயலாளரும் தூய தனித்தமிழ் உணர்வாளரும், நெடுநாளைய தென்மொழி அன்பருமாகிய உயர்திரு பழ. கருப்பையா அவர்களையும் கலந்து பெரிய விழாவுக்கும், ஊர் வலத்துக்குமாக ஏற்பாடு செய்து விட்டார். தாரை, தப்பட்டை, எக்காளம், சிலம்பாட்டம், கத்தி வீச்சு இவற்றுக்கெல்லாம் பெருத்த ஆர்ப்பாட்டமாக முன்னேற்பாடுகள் செய்திருந்தார்.

முன்னர்க் குறித்தவாறு அமைப்பாளர் கூட்டம் 19—4—82 காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் மறுநாள் காலையிலும் புதுக்கோட்டை நகராட்சி விடுதியில் நடைபெற்றது. தக்க பொறுப்பாளர்கள் மாவட்டத்திற்கும், வட்டங்களுக்குமாக அமைக்கப் பெற்றனர். மாலை 7 மணியளவில் ஊர்வலம் தொடங்கியது. இந்த ஊர்வலத்தில் முன்னதாகத் தலைமை தாங்கிச் செல்லுமாறு பாவலரேறு அவர்கள் அழைக்கப் பெற்றவுடன், அதை அவர்கள் மறுத்தார்கள். 'தொடக்கத்தில் இப்படித்தான் தொடங்கும்; பிறகு மலர்மகுடம், சுவடிப்புத்தேர் முதலிய ஆரவார ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகளில் கொண்டு போய் விட்டுவிடும். அந்த வேடிக்கை விளம்பர நிகழ்ச்சிகளிலெல்லாம் என்னை ஈடுபடுத்தி, மீண்டும் முன்னைய தலைவர்களைப் போலவே என்னையும் பயனற்றவனாகத் திசை மாற்றி என் உழைப்பை வீணாக்கி விட வேண்டாம்' என்று பாவலரேறு ஊர்வல அமைப்பாளர்களிடமும், திரு. பழ. கருப்பையா, திரு. பாவாணன் அவர்களிடமும் கேட்டுக் கொண்டும் அவர்கள் 'இனிமேல் இப்படி நடக்க வேண்டாம்; இப்பொழுது மட்டும் — முதல்முறையாக இருப்பதால் வாருங்கள்; மக்களுக்கு ஆர்வம் வரும்' என்று வலியுறுத்தி, பாவலரேறு அவர்களை இணங்கச் செய்து விட்டார்கள். அவர்களிடம் 'இனிமேல் இவ்வாறு நடவாமல் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று பாவலரேறு கண்டிப்பாகக் கேட்டுக் கொண்டார்கள். ஊர்வலம் மிகவும் சிறப்பாகப் புதுக்கோட்டை நகரமன்றத் திடலை 8 மணியளவில் அடைந்தது.

நிகழ்ச்சிக்குத் திரு. இரா. இமயநெடுஞ்சேரலாதன் தலைமை தாங்கினார். திரு. ம. வரவேற்றான் வரவேற்புரையாற்றினார். பாவலர்கள் தனிக்கொடி, மணப்பாறை நாவை, சிவம், கவிக்குயில், கலைக்குயில், கலைப்பித்தன், இளங்கோவன், வெள்ளிநிலவன், முத்தமிழ்ப்பித்தன், கவிதைப்பித்தன், வெள்ளரசு, வேங்கடராமன் ஆகியோர் வரவேற்புப் பாக்கள் பாடினார்கள். அனைவருடைய பாக்களும் மிகச் செறிவாகவும், சிறப்பாகவும் இருந்தன. இவர்களையெல்லாம் இவர்களின் ஆசிரியர் புலவர் திருமாவளவன் நன்கு பயிற்றியிருந்தது கேட்டுப் பாவலரேறு அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். கவிக்குயில், கலைக்குயில், இருவரும் பெண்பாற் பாவலர்கள். இவர்களை உள்ளடக்கிய அனைவரின் பாடல்களுமே மிகச் சிறப்பாக விருந்தனவேனும் இடமின்மையால் அவையனைத்தையும் இங்கு வெளியிடற் கியலாமை குறித்து வருந்துகிறோம். எடுத்துக் காட்டுக்காக, இறுதியிற் பாடிய நடுத்தர அகவை

www.thamizham.net - Free E book No 7520

யுடைய பாவலர் திரு ந. வேங்கடராமன் அவர்களின் வரவேற்புப் பாக்கள் இரண்டினை மட்டும் இங்கு வெளியிடுகிறோம்.

பெருஞ்சித்திரர் திறன்பற்றியே பிறன்தொற்றினை நீக்கிப்
பருந்தொப்பவே பழஞ்சொற்களைப் பறந்தெத்துவா ரோட்டி
விருந்துட்பொதி நறுங்கட்சுவை விழைந்திப்புவி யாவும்
அருஞ்சொற்றமி ழமிழ்தத்தினை அருந்தத்தவம் செய்வோம்!

பாவல ரேறே! பைந்தமிழ்ப் பேறே! பாசறைத்தேரெழு கோவே!
காவலர் நேபர் காவினிற் றேர்ந்த கனிமர மேமொழி ஞாற்றே
மாவல ரேயுள் மாட்சிமை யேவெல் மானமொ டாண்மையின் மூச்சே!
ஆவலி னுளுன் ஆழ்மனந் தொட்டேன்! ஆர்தமி ழன்பரே வாழி!

பாவலர்கள் வரவேற்புக்குப்பின் திரு. இரா. பாவாணன் எழுச்சியுரையாற்றினார். அவரைத் தொடர்ந்து திருவாளர்கள் பல்லடம் தென்மொழி ந. முத்துக்குமரனார், திருமாவளவன் ஆகியோர் இயக்கத் தேவைகளை வலியுறுத்தி உணர்வுரையாற்றினர். அதன்பின் திரு. பழ.கருப்பையா அவர்கள் தமக்கேயுரிய ஈடும் எடுப்பும்நிறைந்த குரலில் மிகச் சிறந்ததோர் ஆர்வவுரை நிகழ்த்தினார்கள். இறுதியில் பாவலரேறு அவர்கள் இரண்டு மணி நேரம்,கூட்டம் உணர்வும் ஊக்கமும் விளக்கமும் பெறுமாறு, இயக்கத் தேவைகளையும் கொள்கைகளையும் வரலாற்றடிப்படையில் வலியுறுத்தி அரியதொரு சிறப்புரையாற்றினார்கள். இடையிடையில் பாவலரேறு அவர்களின் உணர்வுரையால் பலரும் தமிழனின் இழிந்த நிலையெண்ணி உருகிக் கண்ணீர் வடித்தது குறிப்பிடத் தக்கது. இரவு 12½ மணியளவில் நிகழ்ச்சி முடிந்தது.

இந்நிகழ்ச்சிக்கு மூல கரணியராகவிருந்த திரு இரா.பாவாணன் அவர்களுக்கும் அவருடன் ஒத்துழைத்த அனைத்துத்தமிழ்நெஞ்சங்கட்கும் நம் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் தங்கல் செலவையும், உணவுச் செலவையும் அன்பர்களே தாங்கிக்கொண்ட தகைமையை மிக்க நன்றியுடன் பாராட்டுகிறோம்.

திருச்சி நிகழ்ச்சி

அடுத்து, 20.4.82 அன்று திருச்சி நகராட்சி விடுதியில் நடந்த அமைப்புக் கூட்டத்தை, அமைத்துத் தந்த திருச்சி மாவட்ட உ.த.மு.க. செயலர் திரு. நாரா. மகிழ்நன் அவர்களும், பொருளர் திரு குழந்தை ஈகவரசன் அவர்களும், திரு. இமயவரம்பன் அவர்களும் பெரிதும் பாராட்டுக்குரியவர்கள். இங்கும் தங்கல் செலவும் உணவுச் செலவும் அவர்களாலேயே ஏற்றுக் கொள்ளப் பெற்றன. அவர்களின் பெருந்தகைமையும் அருள் நெஞ்சும் பாராட்டி மகிழ்வதற்குரியன. புதுக்கோட்டை, திருச்சி அமைப்புக்கூட்ட நிகழ்ச்சிகளில் திரு. சு. இளங்கோவன் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

www.thamizham.net - Free E book No 7520

சேலம் நிகழ்ச்சி

இனி. 21-4-82 அன்று சேலம் மாவட்டப் பொறுப்பமர்த்தக் கூட்டம் நெடுநாளைய தென்மொழியன்பர் திரு. மு. பழ.சதாசிவம் அவர்களின் நற்றுணையாலும் நல்லன்பாலும் சிறப்புற நடைபெற்றது அன்பர் திரு. பழநிச்சாமி அவர்களும் அமைப்பாளர்களுக் குதவுவதில் மு.பழ.சதாசிவத்துக்கு உறுதுணையாக விருந்தது குறிப்பிடத்தக்கது. தென்மொழி நா. இளமாறன் அவர்கள் பாவலரேறு அவர்களுக்கும் அமைப்புச் செயலாளர்க்கும் இறுதிவரை துணையாக விருந்தார்.

பாவேந்தர் வீட்டு செய்தி: சேலம் அமைப்புக் கூட்ட நிகழ்ச்சியின் பொழுது, மணப்பள்ளியிலிருந்து ஆசிரியர் திரு. இராம சுப்பிரமணியம் என்பார் ஒருவர் வந்து பாவலரேறு அவர்களைப் பார்த்து நெடுநேரம் தம்வாழ்வியல் தொடர்பான செய்திகளைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர் பாவேந்தரின் கடைசி மருமகன். காலஞ்சென்ற பாவேந்தரின் கடைசி மகள் திருவாட்டி. இரமணியின் கணவர். பாவேந்தரின் வீட்டுச் சொத்துகள் பகிர்வுத் தொடர்பாக அவருக்குள்ள மனக்குறையைப் பாவலரேறு அவர்களிடம் அவர் சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார். பாவலரேறு அவர்கள் தலைமையில் அமைந்த ஐந்தாயத்தார்தாம் பாவேந்தர் விட்டுச்சென்ற மனையியல்,நூல்கள் தொடர்பான சொத்துகளைப் பகிர்வு செய்தவர்கள். அவ்வகையிலும், அதன்பின்னர் அரசு பாவேந்தர் வீட்டாருக்குச் செய்த நலன்களிலும் தமக்கும், தம் பிள்ளைகளுக்கும் (பாவேந்தர் பெயரப் பிள்ளைகள்) கிடைக்க வேண்டிய நயமான பங்கு கிடைக்கப் பெறுமல் தாம் ஏமாற்றப் பட்டதாகக் கூறிக் குறைபட்டுக் கொண்டிருந்தார். தாம் இது தொடர்பாக வழக்குத் தொடரப் போவதாகவும் அரசிடம் முறையிடப் போவதாகவும் மிகவும் காரசாரமாகப் பேசிய திரு. இராம. சிவசுப்பிரமணியத்தைப் பாவலரேறு மிக அமைதி யுறும் படியும்,இணக்கமான முறையில் பாவேந்தர் குடும்பப் பொறுப் பாளர்களைக் கலந்து பேசி முடிவு எடுக்கும்படியும் கூறினர். ஆனால் அவர் ஏமாற்றப்பட்ட மனக்கொதிப்பால் மிகவும் உருக்கமாகவும்-சினத்துடனும் பாவேந்தர் குடும்பத்தாரை நொந்து கொண்டிருந்தார். இறுதியில் அவர் மேற்கொள்ள விரும்பும் முறை எதுவாயினும் அதனை அமைதியாக எண்ணிப்பார்த்து, பகையுணர்வின்றிச் செய்யு மாறு பாவலரேறு அவர்கள் கூறிபனுப்பினர்.

சேலத்திலும் அமைப்பாளர்களின் தங்கல், உணவு ஆகியவற்றுக் கான செலவை நம் மதிப்பிற்குரிய மு. பழ. சதாசிவம் அவர்களே ஏற்றுக் கொண்டதும் நன்றியுடனும் நினைவுடனும் குறிக்கத்தக்கது.

தென்னார்க்காடு நிகழ்ச்சி

தென்னார்க்காடு அமைப்பு நிகழ்ச்சி 22-4-82 ஆம் பக்கல் விழுப்புரத்தில் நடைபெற்றது. தங்கலுக்கான வழிப் போக்கர் விடுதியை, முன்னரே திருக்கோவிலூர் அன்பர் திரு. கதிர்வேலு ஏற்பாடு செய்திருந்தார்.

www.thamizham.net - Free E book No 7520

தொடக்க நாளைய தீவிரத் தென்மொழி அன்பரும் புரப்பாளரும், தென்மொழிக் குடும்ப உறுப்பினரும் ஆகிய திரு அ.தெ. தமிழநம்பி, ஓய்வு பெற்ற காவலரும் பாவலரும், நெடுநாளைய தென்மொழி அன்பரும் ஆகிய திரு. பெ. கோவி. இளஞ்சேரன் மற்றும் அணுக்கத் தென்மொழி உள்ளங்கள் ஆகிய புலவர் திரு. கு. அண்டிரன், திரு. செ. வ. புகழேந்தி, திரு. இரா. தமிழ்வேந்தன் எழில், திரு. சுப. திருமாறன், திரு ச. சின்னத்துரை, அவர் துணைவியார் சின்னசேலம் மருத்துவர் அ விசுவநாதன் அவர் துணைவியார், திரு. நக்கீரன் திரு. விழுப்பரையன் முதலியோர் பாவலரேறு அவர்களை மாலை சூட்டி வரவேற்றனர். பொறுப்பாளர் அமர்த்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. உணவுப் பொறுப்புகளைத் திரு. அ. தெ. தமிழநம்பி அன்புடன் கவனித்துக்கொண்டார். அனைவரும் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்கள்.

இந்த 2-ஆம் சுற்றில் 23-ஆம் பக்கல் அமைவதாகவிருந்த செங்கழுநீர்ப்பட்டு அமர்த்த ஆய்வுக் கூட்டம் பாவலரேறு அவர்களின் உடல் நலக் குறைவால் வேறொரு நாளுக்குத் தள்ளிப் போடப் பெற்றது.

மொத்தத்தில் கழக முதல்வரின் இந்த 2-ஆம் சுற்றுச் செலவு மிகவும் பயனுடையதாகவும், பழைய அன்பர்களின் தொடர்பை வலிவுறுத்திக் கொள்வதாகவும் இருந்தது. முதல்வரின் அடுத்த ஆய்வுச் சுற்றுச்செலவு மதுரை, முகவை, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக அமையும். அதன்பின் நீலமலை மாவட்டமும், செங்கழுநீர்ப்பட்டு மாவட்டமும் வேறொரு சுற்றுச் செலவில் அடக்கப் பெறும்.

நெறிமுறைகளும் முகவரிச் சுவடியும்

பெரும்பாலும் எல்லா மாவட்டங்களின், வட்டங்களின் பொறுப்பமர்த்தங்கள் ஒருவாறு நிறைவு பெற்றபின், ஆங்காங்கே சிற்றூர்க் கிளைகள் தோற்றுவிக்கப பெறும். அவற்றுக் கிடையிலேயே வெளி மாநிலங்கள், வெளிநாடுகள் ஆகியவற்றின் கழக அமைப்புகளும் தோற்றுவிக்கப் பெறும். அதற்குள் 'கழகக் கொள்கைகளும் நெறிமுறைகளும் செயற்படுத்தங்களும் என்னும் நூல் அச்சிடப்படும். அத்துடன் கழகப் பொறுப்பாளர்களின் முகவரிச்சுவடி அச்சிட்டு அணியமாக்கப் பெறும்.

கழகச் செய்தியிதழ்

உ.த.மு.க. விற்கெனத் 'தமிழ்நிலம்' என்னும் கிழமைச் செய்தி இதழ் வெளியீட்டுத் தொடர்பாக அனைத்து முயற்சிகளும் நடந்து வருகின்றன. முறையான இதழ்ப் பதிவு நடைபெற்றதும் இதழ் உடனடியாக வெளிவரும்.

www.thamizham.net - Free E book No 7520

உ.த.மு.க. பொறுப்பாளர்களின் முகவரி விளக்கச் சுவடி
(பொறுப்பாளர்கள் கவனிக்கவும்)

தலைமைக் கழகத்தினின்று உ. த. மு. க. பொறுப்பாளர்களின் முகவரி விளக்கச் சுவடி ஒன்று அச்சில் வெளிவர விருப்பதால், இதுவரை அமர்த்தம் பெற்ற கழகப் பொறுப்பாளர்கள், எல்லைக்கடவு (Passport) அளவில், தங்கள் மார்பளவுப் புகைப்படங்களை (முழு அளவு புகைப்படம் வேண்டாம்), கீழ்க்காணும் விளத்தக் குறிப்புகளு டன் விரைந்து அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

அமர்த்தப் பொறுப்பு :

பெயர்: (புனை பெயர்களுடன்)

முகவரி:

கல்வி, பிற தகுதிகள்:

பொது ஈடுபாடு (சுருக்கமாக):

பக்கல்: கையொப்பம்

அன்பர்களுக்கு கழக முதல்வரின் அறிக்கை

பேரன்பின் இனிய தமிழ் நெஞ்சங்களே!

வணக்கம். ஏற்கனவே உள்ள **தென்மொழி, தமிழ்ச்சிட்டு** இதழ்ப் பணிகளுடனும் வழக்கமான இடையறு அறிவாக்கப் பணிக ளுடனும், ஏற்கத் தக்க சொற்பொழிவுச் செலவுகளுடனும், இக் காலத்தின் கட்டாயம் கருதி நானே என்மேல் ஏற்றிக் கொண்ட பெருஞ்சுமையாகிய **'உலகத் தமிழின முன்னேற்றக் கழக'** உருவாக் கப் பணி என் உடலும் உள்ளமும் அறிவும் தாங்கிக் கொள்ளும் அள வில், மெதுமெதுவாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. போதிய அளவில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளும் துணைவர்கள் இல்லை. கிடைப்பார்களோ இல்லையோ தெரியவில்லை. அவ்வப்பொழுது கிடைக்கும் தொண்டுள்ளங்கள் ஓரளவே தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றன. வினைகளும் முடுக்கமாக நடைபெறாமல் சுணக்க மாகவே நடைபெறுவதும் தெரிகிறது. அனைத்துக்கும் இரண்டு கார ணங்கள் உண்டு. ஒன்று, பொருள் வளம் நம்மிடம் அறவே இல்லை; கருவிகளும் இல்லை. பொதுத்தொண்டுக்குக் கட்டாயம் இருக்க வேண் டிய பொருள் தேவையில் - கருவியில் ஆயிரத்தில் ஒரு பங்கேனும் நம்மிடம் இல்லை. அந்நிலை ஓரளவில்தானும் நம்மிடம் இருந்தால், முழுநேரத் தொண்டர்கள் பலர் நம்மை நோக்கி வருவார்கள். அது வரை அந்நிலை வாய்க்கும் என்பது அரிதாகவே இருக்கும். இரண்டு, எனக்குச் சுமை மிகுதி. அனைத்தையும் கவனிக்க வேண்டியிருக் கின்றது. இதுவரையிலும் இருந்த மக்கள் தொண்டர் எவருக்கும்

www.thamizham.net - Free E book No 7520

இல்லாதபடியான பொறுப்புகளை வறிந்து ஏற்றுக் கொள்ள வேண்டிய காலச் சூழலும் கட்டாயமும் எனக்கு ஏற்பட்டு விட்டன. மொழி, இலக்கியம், இனம், நாடு, வரலாறு, மெய்ப்பொருளியல், கலை முதலிய அனைத்துத் துறைகளிலும், எழுத்து, பேச்சு, இதழ், இயக்கம் என்னும் நான்கு முனைப்புகளிலும் ஈடுபட்டு வரவேண்டியதாகப் போய்விட்டது. அதற்காக என் அறிவும் உள்ளமும் சோர்வடைய முடியாது. ஆனால் உடல் சோர்வில்லாமல் இருக்கவியலுமா?

வீட்டிலும் சரி, வெளியூர்ச் செலவுகளின் பொழுதும் சரி, ஓயாமல் ஈடுபட வேண்டியுள்ளது. ஓய்வு குறைவு; உறக்கம் குறைவு. வெளியூரில் இருக்கும் பொழுது இரவுணவுண்பதே நள்ளிரவில்தான். உண்டபின் அன்பர்களின் கருத்து விளக்க ஆய்வுத் தொல்லைகள். உறங்குவதற்குப் பின்னிரவு இரண்டு மூன்று மணி ஆகிவிடுகிறது. இவற்றால் உடல்நலத்தை அவ்வளவு சரியாக வைத்துக் கொள்ள முடியவில்லை. அன்பர்களின் ஈடுபாட்டைத் தவிர்க்கவும் இயலவில்லை. என் உடலில் உயிர்த்துடிப்புள்ள ஓர் அணு இயங்கிக் கொண்டுள்ள வரையில், என் அன்னை மொழிக்கும், இம் மக்களுக்கும், என் இனிய தமிழ்நாட்டிற்கும் உழைப்பதையே நான் பேரின்பமாகக் கருதுகிறேன்.

ஆனாலும், சுமைகளால் நான் மெதுவாகத்தானே நடை போட வேண்டியுள்ளது. சுமை குறைவாக உள்ளவர்கள் விரைந்து நடக்கலாம். கைகளில், தோளில், முதுகில் என்று எல்லா வகையிலும் சுமந்து செல்பவர்கள் விரைவாக நடக்க இயலுமா? எனவே, உ. த. மு.க. உருவாக்கம் மெதுவாக நடப்பதுபற்றி எவரும் தவறாகக் கருதி விட வேண்டாம். இவ்வியக்கம் மிக விரைவில் உலகம் முழுவதும் பரவத்தான் போகிறது; இவ்வின ஆக்கத்திற்கு உதவத்தான் போகிறது. பார்க்கத்தான் போகிறீர்கள்! எனவே, எள்ளலோ, சோர்வோ, எவரும் கொள்ளுதல் வேண்டா.

இயக்கம் மெதுவாக ஆக்கம் பெற்றாலும் கட்டுக் கோப்பாக அமைவதில் முழுக்கருத்தும் செலுத்த வேண்டியுள்ளதை அனைவரும் மறந்து விட வேண்டா. உறுப்பினர் சேர்ப்புகள் விரைவில் தொடங்கும். படிவங்கள் அச்சாகின்றன.

எல்லாவற்றிற்கும் பொறுமையாக இருங்கள்! எதிர்கால நல்ல விளைவுக்கு உங்கள் அமைவும், உறுதியும், நம்பிக்கையுமே ஆக்கங்கள். பிற பின்னர்.

*அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை. (1027)

சென்னை - 5 }
7- 5- 82 }

அன்புநிறை
பெருஞ்சித்திரனார்.

* இக்குறள் விளக்கத்திற்கு இம்மாதத் 'தமிழ்ச்சிட்டை'ப் பார்க்கவும்.

www.thamizham.net - Free E book No 7520

தூலறுக்கக் கொண்டோம் நற்றூள்!

—ஒளியன், காரைக்குடி.

தங்கத் தமிழர்மேல் சீறி விழுந்திட்ட
சிங்களர் செய்கை சிறியதே — பொங்கிப்
புறப்பட்டால் என்னுவர்? சிங்களத்தில் மற்ருேர்
புறப்பாட்டுக் காண்போம் இனி!

கற்றவரோ காடு திருத்திட வல்லவரோ
கொற்றவரோ கொல்குணத்துச் சிங்களரே - மற்றவரின்
கைவண்ணம் தந்த கனிச்சுவையில் பேதலித்து
வையத்தில் பெற்ருய் வடு.

நிலம்விண்டு போகாதோ, நீள் விசும்பு கொட்டிப்
புலம் கடலுள் போகாதோ, தீயே — வலம் வந்து
தீய்க்காதோ சிங்களரை? இன்றேலெம் செந்தமிழர்
சாய்க்காரோ சாவின் முகத்து.

இலங்கைத் தமிழர்க்கே இன்னல் விளைத்துக்
கலங்கடித்த சிங்களரைக் காறி — விலங்கிட்டு
வாலொடிக்க வந்திடுவோம் தோளெழுந்தால் தூள்
தூலறுக்கக் கொண்டோம் நற், தூள்! [தூளே!

உடல்பொருள் ஆவிகற்பு யாவும் இழுக்க
இடர்தந்த சிங்களரே உங்கள் — குடல் பிடுங்கிக்
குற்றுயிர்மேல் எம்மனேர் கோலோச்சும் நற்செய்தி
பெற்றுடைமை செய்வோம் பொறும்!

சின்னஞ் சிறுதீவில் செய்த பெருங்கொடுமை
என்னெஞ்சில் வெஞ்சினமாய் மூண்டதே — மன்னஞ்ச
வாழ்ந்த தமிழர்க்கோ செய்தாய் மதியிழந்து
வீழ்ந்தாய் விலங்கினுக்குங் கீழ்!

அரசில் தமிழனில்லை அன்பில்லை உள்ளம்
முரசொலித்து ஊட்டவில்லை வீரம் — புரட்சிக்
கடல்கடந்து நம்வலிமை காட்டுதற்கு இன்றே
எடுப்போம் உறுதி இசைந்து!

தென்மொழி

சென்னை-5

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	35 உருபா	35 உருபா
அரையாண்டுக் கட்டணம் :	8 ,,	18 ,,	18 ,,
தனியிதழ் :	1-25 ,,	3 ,,	3 ,,

ஓரிதழுக்கு உருபா 2.50 மேனி முன்பணம் கட்டக்கூடிய
விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க

www.thamizham.net - Free E book No 7520

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

(தலைமையகம்)

பொறுப்பமர்த்த அறிக்கை — ௨

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பாளர்களாகக் கீழ்க்காணும் அன்பர்கள், கொடுக்கப்பெற்றுள்ள பதவிப் பொறுப்புகளில் 1.5.82 முதல் கழகச் சட்ட நெறிமுறைகளுக்குட்படும் பதவியாண்டுக் காலத்திற்குப் பதவிப் பொறுப்புகளில் அமர்த்தப் பெற்றுள்ளனர்.

தலைமையகம், சென்னை-5 }
1—5—82 }

பெருஞ்சித்திரனார்
கழக முதல்வர்.

க. **தலைமையகம் :** 1 முதன்மைக் குழு உறுப்பினர்கள்

எழுவரில் முன்னரே மூவர் அமர்த்தப் பெற்றுள்ளனர். கீழ்க்காணும் இருவர் இப்பொழுது அமர்த்தப் பெறுகின்றனர். எஞ்சிய இருவர் அமர்த்தம் ஆய்விலுள்ளது.

4. தென்மொழி கா. இளமாறன், இடை அணை.
5 சுப. திருமாறன், நெய்வேலி.

2 தலைமைக்கழகச் செயலாளர்கள் :

3. அறிவியல்துறைச் செயலர்: அ. தெ. தமிழநம்பி, விழுப்புரம்.

உ **வடஆர்க்காடு மாவட்டம் -வடக்கு(வேலூர்)**

1 குடியேற்றம் வட்டம்

பொருளர்: வ. அ. இளமுருகு, நடுப்பேட்டை.

2 வாணியம்பாடி வட்டம்

செயலர்: ந. அருட்செல்வன் (கருணாநிதி), ஆம்பூர்.
(தலைவர், பொருளர் ஆய்வில்)

ங **வடஆர்க்காடு மாவட்டம் - தெற்கு** (திருவண்ணாமலை)

1 திருவண்ணாமலை வட்டம்

செயலர்: இரா. இரேணு, அறி. இ., ச. இ. திருவண்ணாமலை.
(தலைவர் முன்னரே அமர்த்தப் பெற்றுள்ளார். பொருளர் ஆய்வில்)

2 செய்யாறு வட்டம்;

பொருளர் : புலவர் த. குப்பன், செய்யாறு.

ச **தகடூர் மாவட்டம்**

1 கிருட்டிணகிரி வட்டம்

தலைவர்: புலவர் மா. திருமார்பன். க. மு, கிருட்டிணகிரி
(செயலர் முன்பே அமர்த்தப் பெற்றுள்ளார். பொருளர் ஆய்வில்)

www.thamizham.net - Free E book No 7520

2 பாலக்கோடு வட்டம்

தலைவர்: சே. வீ. நம்பி, க. மு. பாலக்கோடு.
செயலர்: மா. கிருட்டிணன், அமானிமல்லாபுரம்.
பொருளர்: க. கோவிந்தன் க. இ., ஆ.ப., பாப்பாரப்பட்டி.

(பொறுப்பு அமர்த்த அறிக்கை 1-இன் படி, பாலக்கோடு வட்டத் தலைவராக அறிவிக்கப் பெற்றிருந்த க. கோவிந்தன் அவர்கள் வட்டப் பொருளராகப் பொறுப்பு மாற்றம் செய்யப் பெற்றிருக்கிறார்)

3 தேன்கனிக் கோட்டை வட்டம்

தலைவர்: அஞ்சை சையது மகபூப், அஞ்செட்டி.
செயலர், பொருளர் (ஆய்வில்)

4 அரூர் வட்டம்

தலைவர்: (ஆய்வில்)
செயலர்: சி. க. சீனிவாசன் க. மு, அரூர்.
பொருளர். க. மேழிவளவன், அ. பள்ளிப்பட்டி.

ரு திருச்சி மாவட்டம்

1 திருச்சி நகரம்

தலைவர்· க. பழனியப்பன், திருச்சி-10
செயலர்: மு. அரத்தினம், திருச்சி - 2
பொருளர்: வே. பாபு, திருச்சி - 8

2 திருச்சி வட்டம்

தலைவர்: மு. செந்தமிழாதன், எலமனூர்.
செயலர்: (ஆய்வில்)
பொருளர்: மு. மலரோன், திருச்சி - 20.

8 மணப்பாறை வட்டம்

தலைவர்: க. கண்ணன் அறி. இ. கரடிப்பட்டி.
செயலர்: புலவர் நாவை. சிவம். இல.இ. மணப்பாறை
பொருளர்: புலவர் பழ. தமிழாளன் க. இ., செவல்பட்டி.

4 பெரம்பலூர் வட்டம்

தலைவர்: ந. சுப்பையா, இலாடபுரம்
செயலர்: மு. பரமசிவம், இல. இ., பீல்வாடி.
பொருளர்: கா. பெரியசாமி, அம்மாபாளையம்,

5 திருவெறும்பூர் வட்டம்

தலைவர்: (ஆய்வில்)
செயலர்: பா. அழகுமதியன், மலைக்கோயில்.
பொருளர்: இரா. மாரிமுத்து, திருச்சி-14

www.thamizham.net - Free E book No 7520

6 துறையூர் வட்டம்
தலைவர்: செ. முத்து அடிகள்
செயலர், பொருளர் (ஆய்வில்)
7 அரியலூர் வட்டம்
தலைவர்: அ. எழிலன்பன் அறி. இ., கல். இ., கண்டராதித்தம்
செயலர், பொருளர் (ஆய்வில்)
8 குளித்தலை வட்டம்
தலைவர்: அ. பெ. வளர்தமிழறிவன், பேட்டைவாய்த்தலை
செயலர், பொருளர் (ஆய்வில்)

சு **தஞ்சை மாவட்டம்**
1 உரத்தநாடு வட்டம்
தலைவர் (ஆய்வில்)
பொருளர்: சே. மெய்யிறைவன் அறி. இ., ஆ.ப.முதலிப்பட்டி
(செயலர் முன்னரே அமர்த்தப் பெற்றுள்ளார்.)
2 மயிலாடுதுறை (மாயூரம்) வட்டம்
தலைவர்: சு. நற்குமரன், வழுவூர்.
செயலர், பொருளர் (ஆய்வில்)

எ **தென்னார்க்காடு மாவட்டம் — வடக்கு** (விழுப்புரம்)
மாவட்ட அமைப்பாளர்: ந. தமிழவேள், திருக்கோவிலூர்.
" செயலர்: விழுப்பரையன், விழுப்புரம்.
" பொருளர்: ச. சின்னத்துரை, நெய்வேலி.
" மகளிரணி அமைப்பாளர்:
திருவாட்டி ஆண்டாள் திருமாறன், நெய்வேலி
1 விழுப்புரம் வட்டம்
தலைவர்: கோவி. இளஞ்சேரன், விழுப்புரம்.
செயலர்: அ. நக்கீரன், கீழ்ப்பெரும்பாக்கம்.
பொருளர்: (ஆய்வில்)
2 திண்டிவனம் வட்டம்
தலைவர்: பொருளர் (ஆய்வில்)
செயலர்: தா. நெஞ்சிற்கினியன், செயபுரம்.
3 திருக்கோவிலூர் வட்டம்
தலைவர்: (ஆய்வில்)
செயலர்: சி. கதிர்வேலு திருக்கோவிலூர்
பொருளர்: தி. ச. தெய்வீகன், திருக்கோவிலூர்

அ **தென்னார்க்காடு மாவட்டம் — தெற்கு** (கல்லக்குறிச்சி)
மாவட்ட அமைப்பாளர்: புலவர் கா. தூக்கிய திருவடி, உளுந்தூர்ப்பேட்டை.
" செயலர்: செ. வ. புகழேந்தி அறி. இ., கல், இ. கல்லக்குறிச்சி.

www.thamizham.net - Free E book No 7520

மாவட்டப் பொருளர்: இரெ. தமிழ்வேந்தன் எழில்,
பெண்ணாகடம்
,, மகளிரணி அமைப்பாளர்: கே. தாமரைச்செல்வி
அறி. மு., சின்னசேலம்.

1 கல்லக்குறிச்சி வட்டம்
தலைவர்: க. நெடுவேல் சேரன். கல்லக்குறிச்சி.
செயலர்: புலவர் கு. அண்டிரன், நாயனூர்பாளையம்.
பொருளர்: சா. சண்முகம், கல்லக்குறிச்சி.

2 உளுந்தூர்ப்பேட்டை வட்டம்
தலைவர்: வீ. சீத்தாராமன், உ. செல்லூர்.
செயலர்: புலவர் கு. செம்பியன், கந்தசாமிபுரம்.
பொருளர்: (ஆய்வில்)

கூ சேலம் மாவட்டம்

மாவட்ட அமைப்பாளர்: (ஆய்வில்)
,, செயலர்: மு. பழ. சதாசிவம், தாதகாப்பட்டி
,, பொருளர்: (ஆய்வில்)

1 சேலம் வட்டம்
தலைவர்: ப. க. அன்பின்பன், சூரமங்கலம்.
செயலர்: க. பழனிச்சாமி, மாரமங்கலத்துப்பட்டி.
பொருளர்: (ஆய்வில்)

2 மேட்டூர் வட்டம்
தலைவர்: பைந்தமிழ்ப்பித்தன், தங்கமாபுரிப்பட்டணம்
செயலர்: தமிழ்த்தென்றல், தங்கமாபுரிப்பட்டணம்
பொருளர்: பா. பாபு, கருமலைக்கூடல், மேட்டூர்

3 இராசிபுரம் வட்டம்
தலைவர்: கொ. பரமசிவம் க. இ, ச. இ. அத்தனூர்
செயலர்: உளங்கவரழகன், இராசிபுரம்
பொருளர்: தொ. செ. கந்தசாமி, தொட்டிப்பட்டி

கூ புதுக்கோட்டை மாவட்டம்

மாவட்ட அமைப்பாளர்: இரா. இமயநெடுஞ்சேரலாதன்,
புதுக்கோட்டை
,, செயலர்: இரா. பாவாணன், புதுக்கோட்டை
,, பொருளர்: சி. தமிழ்க்குமரன், கீரமங்கலம்

1 புதுக்கோட்டை வட்டம்
தலைவர்: கா. சுப. காளிமுத்தன், புதுக்கோட்டை
செயலர்: (ஆய்வில்)
பொருளர்: கரு. முல்லைச்செல்வன், திருக்கோகர்ணம்

www.thamizham.net - Free E book No 7520

செய்திகள்

1 பெண்ணாடம் (தெ ஆ) தமிழ் இலக்கியப் பேரவை:

கடந்த மீனம் உஎ (9—4—82) வெள்ளி மாலை 6½ மணியளவில் தெ. ஆ. பெண்ணாடம் சுழற்கழகமும், அருணா (சர்க்கரை ஆலை) மனமகிழ் மன்றமும் இணைந்து நடத்திய, தமிழ் இலக்கியப் பேரவைக் கூட்ட நிகழ்ச்சி, பெண்ணாடம் சுழற்கழகத் தலைவரும், கரும்பு அலுவலக மேலாளருமான திரு.ச. சிவராமசேது அறி. இ., ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. மணியம் அவர்கள் வரவேற்புரையாற்றினார். **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** 'இன்றைய இலக்கியங்கள்' என்ற தலைப்பில் அரியதொரு சிறப்புரை ஆற்றினார்கள். திரு. த. கோ. சம்பந்தம் நன்றியுரையுடன் நிகழ்ச்சி 9 மணியளவில் நிறைவுற்றது.

2. திருமுல்லைவாயில்—உ.த.க.மு. பொதுக் கூட்டம்

கடந்த 11—4—82 ஞாயிறு மாலை 7 மணியளவில், தஞ்சை மாவட்டம், சீர்காழி வட்டம், திருமுல்லைவாயில் பேருந்து நிலையத்தில் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் பொதுக்கூட்டம், மருத்துவர் பன்னீர்ச் செல்வம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கி. அரங்கசாமி வரவேற்புரையாற்றினார், சிங்கப்பூர் பாவலர் **முல்லைவாணன்**. அவர்கள் ஏற்பாட்டுரை நிகழ்த்த, திருவாளர்கள், தொடுவாய் மு தங்கராசன் (தி. மு. க.) திரு. முத்து (தி, க,) கோடிலிங்கம், எசு. ஏ. இலத்தீப் (அ. தி. மு, க,) ஆகியோர், உ. த. மு. க. தோற்றத்தின் இன்றியமையாமையை வலியுறுத்திக் கருத்துரையாற்

(முன் பக்கத் தொடர்ச்சி)

2 குளத்தூர் வட்டம்

தலைவர்: புலவர்: ப. வே. திருமாவளவன், பள்ளத்துப்பட்டி
செயலர்: சி. கணேசன், கீரனூர்
பொருளர்: மா. இலக்குவன், புதுக்கோட்டை

3 ஆவுடையார்கோயில் வட்டம்

தலைவர்: க. வேழவேந்தன் அறி. இ., க மு. வீழிமங்கலம்
செயலர்: செ. கூத்தையன், வீழிமங்கலம்
பொருளர்: (ஆய்வில்)

4 திருமயம் வட்டம்

தலைவர்: வை. வீருண்டான், அரிமழம்
செயலர்: அழ. ஆறுமுகம், கூழிப்பிறை
பொருளர்: கு. பெருமாள், வாழைக்குறிச்சி

(பிற அமர்த்தங்கள் ஆய்வில்)

www.thamizham.net - Free E book No 7520

றினர். இறுதியில் உ. த. மு. க. முதல்வர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** 'தமிழன் அன்றும்—இன்றும்' என்னுந் தலைப்பில் பொதுமக்கள் மனங்கொள்ளுமாறு சிறந்ததொரு வரலாற்றுரையை நிகழ்த்தி, உ. த. மு. க வின் தேவையை நன்கு எடுத்துக் கூறினார். திரு தருமராசன் அவர்களின் நன்றியுரைக்குப்பின் இரவு 10 மணியளவில் நிகழ்ச்சி இனிதே முடிந்தது.

3. தொலைக்காட்சியில் பாவேந்தர் நினைவு நிகழ்ச்சி :

சென்னை, தொலைக்காட்சியில், கடந்த 12-4-82 அன்று இரவு 8-15 வண்ணக்களஞ்சியம் நிகழ்ச்சியில், பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக, **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் 'பாவேந்தரின் நாட்டுப்புறப் பாடல்கள்' என்னுந் தலைப்பில் ஒரு கருத்துரை வழங்கினார். அவர் நிகழ்ச்சிக்கு முன் பேரா மெ சுந்தரம் அவர்களின் 'நாட்டுப்புறப் பாடல்கள்' விளக்கவுரை நிகழ்ந்தது.

4 திருமருகல் (மயிலாடுதுறை) ஆசிரியர் சங்க நடுவக் கூட்டம்:

சென்ற 16-4-82 வெள்ளி மாலை 4 மணியளவில்,மயிலாடு துறை வட்டம் திருமருகல் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில், அறிஞர் அண்ணா ஆசிரியர் சங்க நடுவம் 10-ஆம் ஆண்டு நிறைவு விழா திருமருகல் சரகம் பள்ளித்துணை ஆய்வர் திரு. இரா. கோபாலன் அறி. இ.,ஆ., ப. அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்துக்குப்பின் திரு. கி. செல்வராசு வரவேற்புரை ஆற்றினார். திரு வீ. தங்கராசு ஆண்டறிக்கை படித்தார். தலைவர் முன்னுரையைத் தொடர்ந்து உதவிக் கல்விஅலுவலர் இரா. நாராயணசாமி அவர்களின் உரைக்குப் பின்,**பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் அரிய சிறப்புரை ஒன்று நிகழ்த்தினார். இறுதியில் திருமருகல் நடுவம் செயலர் திரு. சிவ. இராசக் கண்ணு நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.நிகழ்ச்சித் தொடக்கத்தில் ஆசிரியர்களுக்கும் சிறப்புரையாளர்க்கும் சிற்றுண்டி வழங்கப் பெற்றது.

5. தஞ்சை, தமிழ்ப் பல்கலைக் கழகக் கருத்தரங்கு :

சென்ற 1982 ஏப்பிரல் 17, 18-ஆம் நாள்களில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக வளாகத்தில்,அறிவியல் 'தமிழ்க் கலைச்சொற்கள்—நுண்மதிப்பீடு —கருத்தரங்கு' ஒன்றைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின், திட்டமும் தமிழ் வளர்ச்சியும் என்னும் துறை இயக்குநர். பர், **இராம. சுந்தரம்** அவர்கள் கூட்டியிருந்தார்கள். கருத்தரங்கில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்**,. பர் அ. **கதிரேசன்** பர், ஔவை நடவரசன், **பொற்கோ** ப. **அர. நக்கீரன்**, பேரா. கே **கண்ணபிரான்** (முன்னாள் முதல்வர் சி.பி.எம். கல்லூரி,கோவை), பர். க. **இரா.கிருட்டிணன்** பேரா. **இல, செ. கந்தசாமி** (வேளாண் பல்கலைக் கழகம், கோவை) மருத்துவர் பேரா. **இராசராசேசுவரி**(தஞ்சை மருத்துவக் கல்லூரி), பர். **சிவத்**

www.thamizham.net - Free E book No 7520

தம்பி(இலங்கை),பேரா.சுந்தரசண்முகனார் (புதுவை),வழக்கறிஞர், கு ச.ஆனந்தன் முதலியோர் கலந்து கொண்டனர்.முதல்நாள் கருத்தரங்கின் முதல் அமர்வில், இயக்குநர் பர் இராம சுந்தரம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார் துணை வேந்தர் பர்.திரு.வ.ஐ.சுப்பிரமணியம் கருத்தரங்கின் நோக்கத்தை எடுத்து விளக்கினார், அதன் பின்னர் பா. பொற்கோ அவர்களும், பேரா. கே. கண்ணபிரான் அவர்களும் தம் ஆய்வுக் கட்டுரைகளைப் படித்தனர். அவை தொடர்பான அறிஞர்களின் கருத்துரைகளும், ஆய்வுரைகளும் கேட்கப்பெற்றன. அன்று பிற்பகல் நிகழ்ந்த இரண்டாம் அமர்விற்குப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையேற்றார். பேரா. இலெ. செ.கந்தசாமி அவர்கள் தம் கட்டுரையைப் படித்தார். அது தொடர்பாக அறிஞர்களின் கருத்துரைகள் கேட்கப் பெற்றன. அன்றைய கருத்தரங்கு மாலை 5 மணியளவில் முடிவுற்றது. இடைவேளையில் பல்கலைக் கழகச் சார்பாக அறிஞர்களுக்குப் பகல் விருந்து கொடுக்கப் பெற்றது.

மறுநாள் 18—4—82 அன்று காலை 9-30 மணியளவில் இரண்டாம் நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.

அன்றைய கருத்தரங்கிற்கு பர் ஔவை. நடவரசன் தலைமை தாங்கினார். ப.அர. நக்கீரன் அவர்களும். பர். இராசஇராசேசுவரி அவர்களும் கட்டுரை படித்தனர். கருத்தரங்க முடிவாக அறிஞர் பலரும் அறிவியல் சொல்லாக்கத் தொடர்பாகத் தங்கள் தங்கள் முடிவான கருத்துகளைக் கூறினர். பாவலரேறு பெருஞ்சித்திரனார் இரு நாள் கருத்தரங்கிலும் ஏறத்தாழ 2½மணிநேரம் மொழியாக்கம்,சொல்லாக்கம் பற்றிய தம் கருத்துரைகளைத் தெளிவாக எடுத்துரைத்தார், பலவகையான கருத்துகளுடன், பல்கலைக் கழகத் தொடர்பாக ஆக்கப் பெறும் எந்தச் சொல்லாக்கமும், கருத்தாக்கமும் தூய தமிழாகவே இருத்தல் வேண்டும் என்பதை முகாமையாக வலியுறுத்தினார். அறிஞர்கள் சிலரும் அவர் கருத்துகளை ஒப்புக்கொண்டு ஏற்புரை கூறினர். இறுதியில் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பர், வ. ஐ. சுப்பிரமணியம் அவர்களும், தம் முடிவுரையில் அக்கருத்துக்கு ஒப்புதல் தெரிவித்து, வேறு சில செய்திகளையும் எடுத்துக் கூறினார்கள். மறுநாள் பகல் 2 மணியளவில் இரண்டாம் நாள் கருத்தரங்கம் இனிது நிறைவுற்றது. அந்நாள் பகல் விருந்து அறிஞர்களின் சார்பாகப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்க்கு அளிக்கப் பெற்றது.

6 சொல்லாய்வுச் சுற்றுக் கூட்டம்-3, சென்னை :

கடந்த 25-4 82-ஆம் நாள் காலை 10-30 மணியளவில், சென்னை எழும்பூர், மார்சல் சாலையில் உள்ள, தமிழ், சமசுகிருதம் பிற இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில், சொல்லாய்வறிஞர் திரு ப. அருளி வணி, இ; ச. இ; அவர்களின் சொல்லாய்வுச் சுற்றுக் கூட்டம்-3, பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் சக்கை, கல், உரு, காரணம், பந்து ஆகிய ஐந்து சொற்களை ஐயந்திரிபற ஆய்ந்து அருளி அவர்கள் தம் ஆராய்ச்சிக்

www.thamizham.net - Free E book No 7520

கட்டுரைகளைப் படித்து விளக்கினர். அரங்கு நிறைந்த அறிஞர் கூட்டம் ஆராய்ச்சியுரையை இறுதிவரையிருந்து செவிமடுத்து மகிழ்ந்தது. நிகழ்ச்சித் தொடக்கத்திலும் முடிவிலும் நிறுவன இயக்குநர் பர். ஆறு. அழகப்பன் அவர்கள், அறிஞர்களை வரவேற்றும் சொல்லாய்வுத் தொடர்பான எதிர்காலத் திட்டத்தை விளக்கியும் பேசினர். அவர் தம் நன்றியுரையில், இத் தொடர் கூட்டம், நிறுவனத் தலைவர், செயற்குழுவினர் தம் முழு இசைவுடனும் விருப்பத்துடனுந்தாம் நடைபெறுவதாகவும், எனவே இத்தொடர் நிகழ்ச்சி எங்கு இடை நின்று விடுமோ என்று எவரும் ஐயுற வேண்டுவதில்லை யென்றும், இத்தொடர் நூறு சொற்களின் ஆய்வு முடியும் வரை கட்டாயம் நிகழ்த்தப்பெறும் என்றும் கூறியதுடன், விரைவில் ஆய்வு பெற்ற சொற்களைப் பகுதிப்பகுதியாக நிறுனவமே அச்சிட்டு நூலாக வெளிப் படுத்தும் என்றும் உறுதியுடன் எடுத்துக் கூறினர். தலைவரின் முடிவுரைக்கு முன் அன்றைய சொல்லாய்வுத் தொடர்பான தொகுப்புரை வழங்கிய பேராசிரியர். என். சுப்பு (இரெட்டியார்) அவர்கள் இவ்வாய்வுரை தமக்குப் பெறும் வியப்பையும், இறும்பூதை (ஆச்சரியத்தை)யும் அளித்ததென்றும், ஆய்வுரை முடியும் வரையில் தாம் ஏதோ ஒரு கனவுலகத்தில் இருப்பது போல் இருந்ததென்றும், உலக மொழிகளிலெல்லாம் நம் அருந்தமிழ் மொழி ஏற்படுத்திய சுவடுகளை ஆய்வாளர் அவர்கள் எடுத்துக் கூறிய பொழுது, தமக்குச் சொல்லொணு மகிழ்ச்சியும் மனநிறைவும் பெருமிதமும் ஏற்பட்டதென்றும் கூறி, இத்துணைச் சிறு அகவைப் பொழுதிலேயே பெறற்கரிய சொல்லாய்வாற்றலைப் பெற்ற அறிஞர் ப, அருளி அவர்களை மனமார வாழ்த்துவதாகவும் கூறினர். இயக்குநர் அவர்கள் சொற்பொழிவாளர்களுக்கும் அவருடன் வந்திருந்தவர்க்கும் நிறுவனச் சார்பில் பகலுணவு அளித்து விருந்தோம்பியது, அவரது அருளுள்ளத்தையும் தமிழ்ப் புரப்பையும் காட்டியது.

7, துரை தென்னவன் இல்லத்திறப்பு விழா:

நெடுநாளையத் தென்மொழி மெய்யன்பரும், சென்னை மாநகர் உ. த. மு. க. பொருளரும் ஆகிய துரை தென்னவன் அவர்களின் இல்லத் திறப்பு விழா, கடந்த 26-4-82 காலை 10-30 மணியளவில், திருவொற்றியூர் புறநகர் குடியிருப்புப் பகுதியில் சிறப்புற நிகழ்ந்தது, நிகழ்ச்சியில் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் கலந்து கொண்டு, துரை. தென்னவன் அவர்களின் இல்லத் திற்குத் 'தமிழ்ப்பாசறை' என்று பெயர்சூட்டி, அதனைத் திறந்து வைத்தார். விழாவில் பாவலரேறு அவர்கள் குடும்பமும் சொல்லாய்வறிஞர். ப. அருளி அவர்களும், வெங்காலூர் உ. த. மு. க. அமைப்பாளர். திரு. பொற்செழியன் அவர்களும், திருவொற்றியூர் நகர தி. க. தலைவர் திரு. சக்திமோகன் அவர்களும், இன்னும் தென்னவன் பணியாற்றும் 'அசோக் லேலந்து'ப் பணியாளர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பாவலரேறு அவர்கள் அங்கு நடந்த திறப்பு விழா

www.thamizham.net - Free E book No 7520

வாழ்த்துரையில், தென்னவன் அவர்களின் தூய்மையான தொண்டுள்ளத்தையும், தமிழ்ப் பற்றையும், சிறந்த நடைமுறைப் பண்பையும், குணநலன்களையும் மிகுவாகப் பாராட்டி, இத்தகையாரின் குடும்ப நிகழ்ச்சியில் தாம் குடும்பத்துடன் கலந்து கொள்வது பெருமகிழ்வையும், பெருநிறைவையும், பெருமிதத்தையும் பொதுப்பணியால் வரும் சோர்வுநீக்கத்தையும் தருகின்றது என்று கூறினார்கள். பகல் விருந்துக்குப்பின் ஆசிரியர் குடும்பத்தை,திரு.தென்னவன்குடும்பத்தினர் மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் வழியனுப்பி வைத்தனர்.

8. சென்னை பெரியார் திடலில் பாவேந்தர் விழா:

சென்னை, திராவிடர் கழகச் சார்பில் கடந்த ஏப்பிரல் 28, 29, 30 ஆகிய நாள்களில், வேப்பேரி, பெரியார், திடலில் புரட்சிப் பாவேந்தர் விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது. முதல் நாள் விழாவில் **கலைஞர் கருணாநிதி** அவர்களும், தி. க. பொதுச் செயலாளர் **கி. வீரமணி** அவர்களும் கலந்து கொண்டனர். புலவர். **பொன்னி வளவன்** தலைமையில் பாட்டரங்கம் நடைபெற்றது. பாவேந்தருடன் தொடர்பு கொண்ட பேரா. ந. இராமநாதன், பாரிநிலையம் செல்லப்பனார், நாமக்கல் செல்லப்பனார், முல்லை முத்தையா ஆகியோர் சிறப்பும் பாராட்டும் பெற்றனர்,

இரண்டாம் நாள் விழாவில் பெரியார் பேருரையாளர் பேரா. ந. இராமநாதன் அவர்கள் தலைமையில்'பொதுவுடைமைக் கண்ணோட்டத்தில் பாரதியார்-பாரதிதாசன்' என்னுந் தலைப்பில் பர் மா. செல்வராசன் க.மு. அவர்கள் ஆய்வுரையும், பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்கள் சிறப்புரையும் ஆற்றினர்.

மூன்றும் நாள் நடைபெற்ற கருத்தரங்கத்தில் பேரா. க. அன்பழகன்,பேரா. அ. இறையன், என். செல்வேந்திரன்,அரங்க, இராமலிங்கன் ஆகியோர் கலந்து கொண்டனர், பர். ச.சு. இளங்கோ ஆர். எம். சுப்பையா, பாவலர் முருகு சுந்தரம் ஆகியோர் சிறப்பும் பாராட்டும் பெற்றனர்.

9. காஞ்சிபுரம், பகுத்தறிவு விளக்கக் கூட்டம்:

சென்ற மேழம் 19 (2-5-82) மாலை 7 மணியளவில் காஞ்சிபுரம் இரட்டைமண்டபம் அருகில், காஞ்சிபுரம் பகுத்தறிவாளர்கள் சார்பில் பகுத்தறிவு விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது, நிகழ்ச்சிக்கு முன்னாள் அமைச்சர் செந்தமிழ்ச் செல்வர் திரு. **சி, வி, எம். அண்ணாமலை** அவர்கள் தலைமை தாங்கினார். நிகழ்ச்சி அமைப்பாளர் திரு, புன்செய். கோதண்டம் அவர்கள் வரவேற்புரையாற்றினார். 'இந்திய அரசியலமைப்பில் மாற்றம் தேவை' என்ற தலைப்பில் திரு, சங்கு சுப்பிரமணியன் அவர்களும், 'திராவிட இனக்காப்பு' என்னுந் தலைப்பில் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்களும் சிறப்புரையாற்றினர். காவலர் திரு. வே. கண்ணன் அவர்கள் நன்றியுரை கூற,இரவு இரவு 12 மணியளவில் நிகழ்ச்சி முடிவுற்றது

www.thamizham.net - Free E book No 7520

"குரவர்" என்ற சொல்லின் பொருள் 'பார்ப்பனரா'?

—அசரையா

ஆலத்தூர் கிழார் என்னும் கழகப்புலவர் தமது நண்பரும் மன்னருமான குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மீது பாடிய பாட்டின் முதல்வரிகள் இவ்வாறு உள்ளன:—

"ஆன் முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாண் இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர் தப்பிய கொடுமையோர்க்கும்
வழுவாய் மருங்கின் கழுவாயும் உள என
அறம் பாடிற்றே' (புறம் 34)

மாபெருங் குற்றங்களைச் செய்தவர்களுக்கும் கழுவாய் பெற வழிகள் உண்டு என்ற கருத்தைக் குறிப்பிடப் போந்த அவர், மூன்று மாபெருங் குற்றங்களை எடுத்துக் காட்டுகளாகக் காட்டுகின்றார்.

1. ஆவினுடைய முலை அறுத்தல்.
2. கருச் சிதைத்தல்.
3. குரவர்களின் நெறியை மீறுதல்.

இந்தப் பாட்டின் மூன்றும் வரியில் காணப்படும் "குரவர்" என்ற தூய தமிழ்ச் சொல்லுக்குப் பொருள் என்ன?

புறநானூற்றின் பழைய உரைகாரர் 'தாய் தந்தையர்' என்று பொருள் கூறினார். இது மிகவும் பொருத்தமான பொருளே. இதுவே கழகக் காலத்து வழங்கிய பொருள் என்று கூறலாம். சிலப்பதிகாரத்து இளங்கோ அடிகளும் இந்தப் பொருளையே கொண்டார்.

திருக்குறளிலே இந்தச் சொல் காணப்படாததால், வள்ளுவர் காலத்தில் இந்தச் சொல் எந்தப் பொருளைக் குறித்தது என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் திருக்குறள் 110-ஆம் பாட்டுக்கு உரை வரைந்து போந்த பரிமேலழகர் இவ்வாறு கூறுகின்றார்:—

"பெரிய அறங்களைச் சிதைத்தலாவது
ஆன்முலை அறுத்தலும் மகளிர் கருவினைச்
சிதைத்தலும், பார்ப்பனர் தபுதலும் முதலிய
பாதகங்களைச் செய்தல்"

இந்த விளக்கம் புறம் - 34- ஆம் பாட்டின் பொழிப்புரை போல் அமைந்துள்ளது. "குரவர்" என்ற சொல்லுக்குப் "பார்ப்பனர்" என்று பொருள் கூறுகின்றார். அவர் பார்ப்பனர் அல்லரா? ஆரியருடைய உயர்வை எங்கும் கட்டிக்காப்பது ஓர் ஆரியனுடைய தலையாய கடமையல்லவா? தமிழைத் தாழ்த்துவதின் மூலந்தானே ஆரியனை

www.thamizham.net - Free E book No 7520

உயர்த்த முடியும்! எனவே ஒரு நல்ல தமிழ்ச் சொல்லுக்கு ஆரிய வண்ணம் தீட்டி விட்டார்.

போகட்டும், இந்தக் "குதிரையேறிப் பெருமானை" விடுங்கள். இன்றைக்கு வாருங்கள். "தமிழ்த்தாத்தா" என்று தமிழர்கள் அன்புடன் சிறப்பித்துப் போற்றும் உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் புறம் 34-ஆம் பாட்டுக்கு என்ன விளக்கம் கூறுகின்றார்?

"கோவதை முதலியவை .... சொல்லவும்
படாமையின், ஆன்முலை யறுத்த எனவும்,
மகளிர் கருச் சிதைத்த லெனவும்,
பார்ப்பனர் தப்பிய வெனவும் மறைத்துக்
கூறப்பட்டன".

இவரும் "குரவர்" என்ற சொல்லுக்குப் "பார்ப்பனர்" என்றே பொருள் கொண்டார். இவரும் பார்ப்பனர் அல்லரா? இவருக்கும் ஆரிய உயர்ச்சிக்குப் பாடுபடுதல் ஒரு தலை சிறந்த கடமையன்றோ? என்றாலும் உள்ளம் குறுகுறுக்கின்றது. என்ன செய்வார்?

இவ்வாறு தாம் தரும் நஞ்சு கலந்த உரைக்குச் சப்பைக்கட்டு கட்டுவதற்காக அய்யர் அவர்கள் ஆரிய அடிமையான கம்பனுடைய துணையை நாடுகின்றார். கம்பர் பெயரைச் சொன்னால் தமிழன் பெட்டிப் பாம்பு போல் அடங்கி விடுவானல்லனோ? அவர் எடுத்துக் காட்டும் கம்பனுடைய வரிகள் இவை:—

சிதை வகல் காதற்றாயைத் தந்தையைக் குருவைத்
தெய்வப்
பதவியந்தணரை யாவைப் பாலரைப் பாவை மாரை
வதை புரிகுநர்க்கு முண்டா மாற்றலா மாற்றன் மாயா
உதவி கொன்றார்க் கென்றேனு மொழிக்கலா
முபாயமுண்டோ"
(கம்ப. கிட்கிந்தை.62)

கம்பன் தமிழனாயிருந்தும் ஆரியருடைய உயர்ச்சிக்கு ஆரியனை விடச்சிறப்பாய் பாடுபட்டவன். அவனிடத்திலா அய்யரவர்களுக்கு சான்றுகள் கிடைக்காது? கம்பனுடைய பாட்டும் புறம் 34 ஆம் பாட்டுக்கு ஒரு பொழிப்புரையே போல் அமைந்துள்ளது.

ஆனால் இந்தக் கம்பனின் கூற்றில் ஒருவேடிக்கை! யார் யார் "குரவர்" என்பதற்கு விளக்கம் தருகின்றார்:—

"காதல்தாய், தந்தை, குரு, தெய்வப் பதவி யந்தணர்' என்று பட்டியல் போட்டுக் காட்டுகின்றார். கருத்திலும் ஆலத்தூர் கிழார் மீது மேலும் ஒரு படி ஏறிச் செல்கின்றார். ஆலத்தூர் கிழாரின் பெருங்குற்றம் புரிந்தவர்களுக்கு உய்வுண்டு என்ற கூற்றைப் புறக்

www.thamizham.net - Free E book No 7520

கணித்துப் பார்ப்பனனைக் கொன்றவனுக்கு உய்வே இல்லை' என்ற கருத்தை அடிப்படையையே மாற்றுகின்றார்.

ஆலத்தூர் கிழாரின் சுடுசொல்லாலேயே ஆரியம் வேறூன்றி விட்டது என்பதற்கு இந்தப் புறநானூற்றுப் பாடல் எடுத்துக் காட்டு. ஆவிற்குத் தீங்கிழைப்பதையும், தாய் தந்தையரைப் பிழைப் பதையும் சமப்படுத்திக் கூறுவதிலிருந்து இது தெரியவில்லையா? ஆவிற்குத் தீங்கிழைப்பதற்கும் மற்றொரு விலங்கிற்குத் தீங்கிழைப் பதற்கும் என்ன வேறுபாடு இருக்க முடியும்? ஆலத்தூர் கிழார் காலத்திலேயே தமிழன் ஆரிய வல்லாண்மையை ஏற்றுக் கொள்ளத் தொடங்கி விட்டான். ஆனால் "குரவன்" என்ற சொல்லுக்குப் பார்ப்பனர் என்று தவறான பொருளை ஏற்றிக் கூறியவன் பிற்காலத் தமிழன் தான்.

புறநானூறுக்கு ஏறத்தாழ 800 ஆண்டுகளுக்குப் பின் எழுதப் பெற்ற "ஆசாரக்கோவையிலே" "குரவர்" என்றால் யார் யார் என்று பட்டியல் போட்டுக் காட்டப்பட்டுள்ளது.

"அரசன், உவாத்தியான், தாய், தந்தை, தம்முன்"
(அண்ணன்)

(ஆசாரக்கோவை 16)

இவர்கள் தாம் "நிகரில் குரவர்" களாம்!

ஆசாரக் கோவையை எழுதிய பெருவாயின் முள்ளியார், ஆரியரை விட ஆரிய வெறி பிடித்த தமிழர் (எடுத்துக்காட்டு: ஆசாரக் கோவை 15) இவர் கூட "குரவர்" என்ற சொல்லுக்குப் "பார்ப் பனர்" என்று பொருள் கூற முன்வரவில்லை. எனவே, இவருடைய காலத்துக்குப்பின், கம்பனாலும் பரிமேலழகராலும் தமிழ்த்தாத்தாவாலும், இந்தப் பொருள் ஆரிய உயர்ச்சியை முன்னிட்டு வலிந்து கூறப்பட்டதென்னலாம். ஒரு நல்ல தமிழ்ச்சொல்லை எப்படி அலங் கோலப்படுத்தி விட்டார்கள், பார்த்தீர்களா?

"குரவன்" என்ற சொல்லின் பொருள் வளர்ச்சி

1. சங்க காலம் — தாய் தந்தையர் இருவர்
2. சிலப்பதிகாரகாலம்- ,,
3. ஐவர் பெருவாயின் முள்ளியார்காலம் { அரசன், தாய், தந்தை ஆசிரியர், அண்ணன்
4. நால்வர் — கம்பன் காலம் { தாய், தந்தை, ஆசிரியர் பார்ப்பனர்
5. ஐவர் — பரிமேலழகர் காலம் } ,,
6. ஐவர் — சாமிநாதய்யர் காலம் (இக்காலம்) } ,,

www.thamizham.net - Free E book No 7520

சென்ற இதழ்த் தொடர்ச்சி தொடர்: 7

சிலம்பிற் பிழையா?

—புலவர்: இறைக்குருவனார்

இடை நேரம்

தயிர் கடையச் சென்றவள் தீக்குறி கண்டு, வருவது ஒன்று உண்டு' எனக் கருதி,வருதுயர் நீங்க 'யாம் குரவைபாடுதும்' என்று தன் மகளைக் கூவிக் கூறிய அளவானே குரவை தொடங்கி விட்ட தென்றும் முடிந்து விட்டதென்றும் எவ்வாறு கூறுதல் இயலும்?

மாதரியும் ஐயையும் தாம் கண்டதும் கொண்டதும் மற்றை ஆய்ச்சியர்க்குத் தெரிவிப்ப அவ்வவருந் தத்தம் நாட்கடன்களை முடித்துக்கொண்டும், பிற பணிகளை ஒதுக்கி வைத்து மாற்று ஏற்பாடு செய்து கொண்டும், குரவையாடுதற்குத் தகத் தம்மைச் சித்தப் படுத்திக் கொண்டு வருவதற்கும், பல்லியக்காரரும் அங்ஙனமே வருதற்கும், ஆடுகளத்தை அணியப்படுத்துதற்கும் உரிய நேரம் வேண்டும் என்பதை உணராது நடைமுறைக்கு முரண்பட உடனே குரவைக்கூத்து நடந்ததெனல் யாங்ஙனம் பொருந்தும்?

பாட்டும், உரைப்பாட்டு மடையும், கருப்பமும், கொளுவுமென அடிகள் அடுத்தடுத்துச் சொல்லிச் செல்கின்றார் எனினும் கருப்பத்திற்கும் கொளுவிற்கும் இடையில் காலமுறையான் இடைவெளி உண்டென்பதை உய்த்துணர்ந்து கொள்க! அங்ஙனம் கொள்ளுதல் நடைமுறை நிகழ்ச்சிக்கும், நாடக இயல்பிற்கும் ஒவ்வாததன்று,

ம. பொ. சி-யின் இயல்பு

மேற்கூறியாங்குப் பாடலடிகள் சிலவற்றை எடுத்துக் காட்டுதலும் அவற்றுள் இருப்பவற்றோடு தாம் கற்பனை செய்து கொண்டவற்றையும் இட்டுக்கட்டி அவற்றையெல்லாம் அவ்வடிகள் புலப்படுத்துவனவாகக் கூறுவதும் சிவஞானம் அவர்களின் இயல்பெனத் தெரிகின்றது. சில காட்டுதும்

'கண்ணகி மதுரையை எரித்தது வெள்ளிக்கிழமை மாலை நேரத்தில் என்பதனை

ஆடித் திங்கள் பேரிருள் பக்கத்து
அழல் சேர் குட்டத்து அட்டமி ஞான்று
வெள்ளி வாரத்து ஒள்ளெரி உண்ண
உரைசால் மதுரையோடு அரைசுகேடு உறும் எனும்
உரையும் உண்டே நிறை தொடி யோயே'

என்று மதுராபதித் தெய்வம் கண்ணகிக்குக் கூறுவதால் அறிகிறோம்.'' என்பது ம. பொ. சியின் கூற்று.

அறிஞர்கள் எண்ணிப்பாருமின்! அவர் எடுத்துக்காட்டும் பாடற் பகுதியால், கடகத்திங்கள் என்பதும், இருட் பக்கம் (கிருஷ்ணபட்

www.thamizham.net - Free E book No 7520

சம்), அழல் (கார்த்திகை) விண்மீன் குறையுடைய தேய்பிறை எட்டாம் நாள் என்பதும் வெள்ளிக்கிழமை என்பதும் பெறப்படுவ தன்றி மாலை நேரம் என்பது எவ்வாற்றானும் பெறப்படாதிருக்கவும், அவர் எத்துணைத் துணிச்சலாக மாலை நேரம் என்பதனையும் சேர்த்துக் கட்டிக் கூறுகின்றார்! இருட்பக்கம் என்றதன் பொருளுணர மாட்டாது மாலை என்று மயங்கினார் போலும்!

காய் கதிர்ச்செல்வனே!

"கோவலன் கொலையுண்ட மறுநாள் — அதாவது தான் மதுரை புகுந்த மூன்றாவது நாள் காலை அடிவானில் கதிரவன் தோன்றி உச்சி வானத்தை நோக்கி எழுச்சி கொள்ளும் முற்பகல் நேரத்தில்தான் கோவலன் கொலையுண்ட செய்தியைக் கண்ணகி அறிந்தாள் என்பது

'காய் கதிர்ச் செல்வனே கள்வனோ என்கணவன்' என்று கதிரவனை நோக்கி அவள் கேட்பதால் அறிகின்றோம்."

என்று மற்றோரிடத்தில் குறிப்பிடுகின்றார் ம. பொ. சி. அவர் காட்டியுள்ள அடி அவர்தாங் கட்டியுரைக்கும் பொருளைத் தருமா என்பதை எண்ணிப்பார்மின்!

"கோவலன் கொலையுண்ட மறுநாள் - அஃதாவது தான் மதுரை புகுந்த மூன்றாவது நாள்" என்பதைத் தங் கற்பனையால் முன்னரே சிவஞானம் முடிவு செய்து கொண்டுள்ளார். 'காய்கதிர் செல்வனே என்றமையால் "அடிவானில் கதிரவன் தோன்றி உச்சி வானத்தை நோக்கி எழுச்சிக் கொள்ளும் நேரம்" என்று கட்டுகின்றார். இங்ஙனம் கொள்ளுதற்கு யாதாயினும் யாப்புறவு உண்டுகொல்!

'காய்கதிர்' என்றமையால் வெப்ப மிகுதியைக் காட்டியதென்றும், செல்வன் என்னுஞ் சொல் இக் காலத்து இளமை குறித்த பெயராய் வழங்கப்படுகின்றமை நோக்கி "உச்சிப் பொழுதைக் கடவாதவன்" என்றுகருதி அவ்வாறுஅவர் உரைத்திருக்கக் கூடுமோ என்று ஊகிக்கின்றேம் அஃது உண்மையாயின் 'காய்கதிர்' என்பது முக்காலத்துள் எக்காலத்துக்கும் பொருந்தும் வினைத்தொகை என்பதையும், 'செல்வன்' என்னுங் குறிப்பு வினையாலணையும் பெயர் அவ்வாறு பருவங் குறித்ததன்று என்பதையும் அவர் அறிகிலர் போலும் என விடுக்க!

'கதிர்' என்னாது'காய்கதிர்'என்றமையான் வெப்ப மிகுதிகொள்ளலாகாதோவெனின் அவ்வாறு கூறுதல் எமது கருத்தன்று. ஆயின் அதுபற்றி "அடிவானில் கதிரவன் தோன்றி உச்சி வானத்தை நோக்கி எழுச்சிக் கொள்ளும் நேரம்" என்று நீட்டுதற்கு இடனில்லை என்றறிக! அன்றியும் ஈண்டுக் குறிப்பிடப்படும் நிகழ்ச்சி முதுவேனிற் காலத்ததாகலின், அக்காலத்து இளங்காலையும் எற்பாட்

www.thamizham.net - Free E book No 7520

டினையும் ஒழிந்த ஏனைப்பொழுதுதெல்லாம் வெயில் மிக்கு வெதுப்பும் இயல்பிற்றேயாதலுங் காண்க!

கோவலன் கொலைப்பட்ட செய்தியைக் குரவை முடிவில் அறிந்து கண்ணகி கதிரவனை விளித்துப் பேசும் நேரம் அவர் கூறு மாறு போல் "கதிரவன் அடிவானத்தில் தோன்றி உச்சிவானத்தை நோக்கி எழுச்சி கொள்ளும் முற்பகல் நேரம்" என்பதை உறுதிப் படுத்திக் கொண்டால் அந்நேரம் கோவலன் பிரிந்து சென்ற நாளின தாக இருத்தல் இயலாது என்பது எளிதாக ஏற்கப்பட்டு; மறுநாளி னதே ஆதல் வேண்டும் என்பது வலிவாகக் கொள்ளப்படும் என்று எளிதாக நம்புகின்றார் போலும்! அதனாலேயே ஆய்ச்சியர் குரவை யின் தொடக்கத்தை அதிகாலை நிகழ்ச்சியாகக் காட்ட முனைகின்றார். அக்கோட்பாடு 'தன்னைப்பற்றுதல்' 'ஒன்றனையொன்று பற்றுதல்' என்னும் ஏரணக் குற்றங்களாதலை அவர் அறிகிலர். அந்தோ, சிவஞானம் அவர்கள் பிழையாக ஒன்றனை நாட்டப் புகுந்து எத் துணை இடர்ப்படுகின்றார்!

முந்திய நாள் மாலை

"ஆய்ச்சியர் குரவைக் கூத்து நடத்தி முடித்த தறுவாயி(தரு ணத்தி)லே கோவலன் கொலையுண்ட செய்தி கண்ணகிக்குத் தெரிந் தது என்பதனை,

> 'குரவை முடிவிலோர் ஊரரவங் கேட்டு
> விரைவோடு வந்தாள் உளள்'

எனக் கூறி, வந்த ஆய்ச்சியானவள்,

> 'அரசுறை கோயில் அணியார் ஞெகிழம்
> கரையாமல் வாங்கிய கள்வனும் என்றே
> குரை கழன் மாக்கள் கொலைகுறித் தனரே'

என்று சொன்னதாகவும் இளங்கோ கூறுகின்றார். இதனால் ஆய்ச்சியர் குரவை நிகழ்வதற்கு **முந்திய நாள் மாலையிலேயே** கோவ லன் கொலையுண்டு விட்டான் என்பது உறுதிப்படுகின்றது."

—என்று தீட்டுகின்றார் சிவஞானம். மேலெடுத்துக் காட்டிய பாடற் பகுதிகளால் குரவைக் கூத்து நடத்தி முடித்த தறுவாயில் கோவலன் கொலையுண்ட செய்தி கண்ணகிக்குத் தெரிந்தது என்பது தான் உறுதிப்படுகின்றதேயன்றிக் குரவை நிகழ்வதற்கு 'முந்திய நாள் மாலையிலேயே கோவலன் கொலையுண்டு விட்டான்' என்பது எவ்வாற்றானும் பெறப்படாமையும் அவர் அதனைத் தங் கற்பனை யால் மாட்டி விடுகின்றமையும் கண்டு கொள்க.

தம் எடுத்துக் காட்டினால் எய்தும், பொருளையும் தாம் தொடுத்து மொழியும் பிறிதொன்றனையும் வேறுபடுத்தி விளங்க உரைக்கும் [illegible] குழறுபடைகள் இன்னும் பல.

www.thamizham.net - Free E book No 7520

கண்ணகியின் கலக்கம்

"கோவலன் தன்னைப் பிரிந்து சென்ற நாளில் குரவைக் கூத்து நிகழ்வதற்கு முதல் நாளில்- இரவில் கண்ணகி உள்ளங்குலைந்தாள். மனம் வருந்தி வெதும்பினாள் என்பதை,

'காதலற் காண்கிலேன் கலங்கிநோய் கைமிகும்
ஊதுலை தோற்க உயிர்க்குமென் நெஞ்சன்றே
ஊதுலை தோற்க உயிர்க்குமென் நெஞ்சாயின்
ஏதிலார் சொன்ன தெவன்வாழி யோதோழி'

'நண்பகற் போதே நடுக்குநோய் கைமிகும்
அன்பனைக் காணா தலவுமென் நெஞ்சன்றே
அன்பனைக் காணா தலவுமென் நெஞ்சாயின்
மன்பதை சொன்ன தெவன் வாழி யோதோழி'

'தஞ்சமோ தோழி தலைவன் வரக்காணேன்
வஞ்சமோ வுண்டு மயங்குமென் நெஞ்சன்றே
வஞ்சமோ வுண்டு மயங்குமென் நெஞ்சாயின்
எஞ்சலார் சொன்ன தெவன்வாழி யோதோழி.

என்றெல்லாங் கூறி, கோவலன் கொலையுண்ட செய்தியைத் தெளிவாக அறியுமுன்னரே, அதனை அறிவிக்கும் தன் எதிரே வந்து திகைத்து நிற்கும் ஆய்ச்சியைப் பார்த்து வாய்விட்டரற்றி அழுகின்றாள். கண்ணகி இங்கு ஓர் இரவு கோவலன் வரத் தவறியமைக்கு அந்த இரவில் அவளடைந்த மனத்துயரம் அவளாலேயே விளக்கப்படுகின்றதன்றோ?
—என்று சிலப்புச் செல்வர் வினவுகிறார்.

மேற்படி பாக்களால் நல்ல பகற்பொழுதிலேயுங் கூடக் கண்ணகி கோவலனைக் காணாது பெரிதும் மனங்கலங்கி வருந்தி, அதனை அப்பொழுதே வெளிபடுத்திய நிலை புலப்படுவதல்லது, அவர் கூறியாங்கு 'முதல் நாளில் - இரவில்' உள்ளங்குலைந்து வருந்தி வெதும்பினாள் என்பதற்கோ, கண்ணகியின் துயரம், 'ஓர் இரவு கோவலன் வரத் தவறியமைக்கு அந்த இரவில் அவளடைந்த மனத் துயரம்' என்பதற்கோ ஏதொரு குறிப்புமில்லாமையும், கைமிகும் உயிர்க்கும், அலவும் மயங்கும் என்னும் வினைகள் நிகழ்காலமே பற்றி நிற்பதல்லது இறந்த காலத்திற்கு ஏலாமையும் கண்டு கொள்க!

தாஞ் செய்து கொண்ட முடிவிற்கேற்பச் சான்று காட்டி நிறுவார்போல் சிவஞானம் கூறுவனவெல்லாம் அளவை முறைக்கு ஒவ்வாத அளப்பு உரைகளேயாதலறிக!

உடன்பாடும் முரண்பாடும்

குரவை முடிவில் ஊர் அரவங் கேட்டு வந்து தன் எதிரே நின்ற மாதரியைப் பார்த்த கண்ணகி, அதற்கு முன்பு கோவலனைப்

www.thamizham.net - Free E book No 7520

பற்றிய அச்ச(பய)மோ, ஆழ்ந்த வருத்தமோ இல்லாமல் இருந்திருப்பாளாயின், கோவலன் கொலையுண்ட செய்தியை ஆய்ச்சி கூறு முன்னே இவ்வளவு தூரம் அரற்றி அழுதிருக்க மாட்டாள். 'நடுக்கு நோய் கைமிகும்', ஊதுலை தோற்க உயிர்க்குமென் நெஞ்சு,' 'அன்பனைக் காணாது அலவுமென் நெஞ்சு', 'மயங்குமென் நெஞ்சு' — என்றெல்லாம் அவள் கூறுவதால், குரவைக் கூத்து நிகழ்வதற்கு முன்பே தன் கணவனுக்கு என்ன கேடு நிகழ்ந்ததோ என்ற ஐயப்பாட்டில் ஆழ்ந்திருந்தாள் என்பது புலப்படும்."

— என்று தம் கருத்துக்கு வலிவேற்ற முற்படுகிறார் ம. பொ. சி.

'நிகழ்வதற்கு முன்னே' என்று மேற்படி பகுதியில் அவர் குறிப்பிடுவது 'முடிவதற்கு முன்னே' என்பது கருதிப்போலும்' அவ்வாறாயின் அதில் எமக்கு எவ்வகைக் கருத்து வேறுபாடுமில்லை, அற்றன்று 'நிகழ்வதற்கு முன்னே' என்றது 'தொடங்குதற்கு முன்னே' என்பது கருதியே' என்பராயின் அவ்வாறு கொள்ளுதற்கு ஏற்புறு சான்றில்லை என்பதை மேற்பகுதியில் விளக்கினேம்.

கோவலன் கொலைச் செய்தியை அறியுமுன்னே கண்ணகி அவனைப் பற்றிய அச்சமும் வருத்தமும் கொண்டிருந்தமைக்கும், ஆய்ச்சியைக் கண்ட அளவானே அவள் பலவாறு அரற்றி அழுதமைக்கும் காரணியம் இரவிடையிட்ட காலநீட்சியே என்ற ம. பொ. சி. யின் கருத்து எமக்கு உடன்பாடில்லை.

மனநிலையும் சூழ்நிலையும்

எதிர்வரும் பெருந்தீங்கை முன்னுணர்த்தும் தீக்குறிகளுள் இனமறியாத துன்பத் தாக்குதலும் ஒன்றேயாம். கற்பென்னும் திண்மையில் ஒப்பற்ற கண்ணகி நல்லாடகு அத்தகைய துன்பமே தாக்கிற்று என்றல் பிழையாகாது. கோவலனைப் பிரிந்த நிலையில் இத் துன்பத் தாக்கத்திற்கு ஆட்பட்ட கண்ணகி கோவலன் வரவை நனி விரைவில் எதிர்பார்த்து மேலும் கலக்கமுற்றாள்.

கோவலனைப் பிரிந்து கண்ணகி பல்லாண்டுகள் தனித்திருந்தவளே ஆயினும் அன்றைக்கும் இன்றைக்கும் மனநிலையிலும் சூழ்நிலையிலும் பெருத்த வேறுபாடு அமைந்து கிடக்கின்றது.

அவன் எழுவென எழுந்து

குடிமுதற் சுற்றமும் குற்றிளை யோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி,

அவள் அவன் பின் காவதம் பற்பல கடந்து போந்தது கணவன் சொல்லைக் கடத்தலாகாது என்பதனுன் மட்டுமன்று, இனி அவனைப்பிரிய விடலாகாது என்னும் வேட்கை பற்றியுமாம்எனினும் பொருந்தும்.

மதுரைக்குப் புறப்படும் முதல் நாளே அவள் கொடியதொரு கனவு கண்டாள். அதன் கொடுமையை அவளே 'கடுக்குமென் நெஞ்

www.thamizham.net - Free E book No 7520

சங் கனவினுல்' என்று கூறினுள். மதுரையை வந்தடைந்த நேற்றும் விடியலில் கோவலன் ஒரு கொடுங்கனவு கண்டு நேற்றுச்சாயுங் காலத்தேதான் அவன் அதனை வெளிப்படுத்திக், 'கடி தீங்கு உறும்' என்முன். அது கேட்ட கவுந்தியடிகளும் மாடலனும் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுமாறு ஆற்றுப்படுத்தி ஆய்ச்சி ஒருத்தியிடம் அடைக்கலம் கொடுத்தனர். அதுவரையில் உறுதுணையாய் வந்த கவுந்தியடிகளும் சென்று விட்டார்.

அடைக்கலம் ஏற்று வந்து கடிமணைப் படுத்திய ஆய்ச்சியோ இன்று அதிகாலையில் தீக்குறி கண்டு தீமை வருவதொன்று உண்டு' என்று கருதி அது தவிர்க்கத் தெய்வம் பராவ ஏற்பாடு செய்திருக் கின்முள். அவ்வாயர்சேரியிலுள்ளார் பலரும் உதோ குரவையாடிக் கொண்டிருக்கின்றனர்.

புகாரின் நீங்கிய சிறிது தொலைவிலேயே 'மதுரை மூதூர் யாது?' என வினவிய அப் பேதைக்கு இப்போதைய மனநிலையில் கோவலனைப் பிரிந்து சிறுபொழுதும் பெரும்பொழுதாய் நெடிது தோன்றுதல் இயல்பேயன்றே'

இத்தகைய சூழலில் கணவனைப் பிரிந்த அவட்கு ஏதோ இன்ன தென்றறியாத துன்ப உணர்ச்சி தாக்குகின்றது. ஆ! அவ் வேழை மகளின் நிலையை எம்மால் எழுதித் தீர்க்கவும் முடியுமோ?

கோவலன் வெட்டுப்பட்ட அதே நேரத்தில் கண்ணகியின் மனம் வெடித்துச் சிதறுவது போன்ற துன்ப நடுக்கம் பெற்றிருத் தல் வேண்டும். அவளைச் சுட்டிக் காட்டிச் சிற்சிலர் ஏதோ பேசிக் கொண்டது அவளுக்கு அதிர்ச்சியை அளித்திருத்தல் கூடும். அதனு லன்றே அவள் ஆய்ச்சியைக் கண்ட அளவானே பலவாறு தன் துன்ப நிலையைக் கூறி அரற்றி அழுதனள்.

இங்ஙனம் கொள்ளுதல் மனவியல் ஆராய்ச்சியாளர்களின் தொலைவிலுணர்தல் பற்றிய விரிவான ஆராய்ச்சி முடிபுகட்கு ஏற்றதேயாதல் அத்துறை நூல்களில் காண்க!

சிலம்புச் செல்வர் தாம் கொண்டதனை விட்டு விடுதலாகாது என்னும் ஒட்டாரமின்றி ஆர அமர யாங்கூறுவதனை எண்ணிப் பார்ப்பின் நன்று. எமது கருத்து ஒரோவழி அவர்க்கு உடன் பாடாயினும் ஆகலாம் (தொடரும்)

அன்பர்கள் கவனிக்க

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், கட்டாயம் **காரி**, **ஞாயிறு** ஆகிய நாள்களில் மாலை 5மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறுர்கள்.

— **அமைச்சர்.**

---

www.thamizham.net - Free E book No 7520

பேரருளாளர் பெரியார்

—தி. நா. அறிவுஒளி, க. மூ

பெரியார் பேரருளாளர்; பேரன்பினர்; பேரறவோர்; பெருந்தலைவர்; மக்கட் பண்பு பேணியவர்; மக்கள் உரிமைக்கு போராடிய மாமறவர்; விடுதலை விறலோர். இவர்க்கீடாக மக்கள் தன்மை செழிக்கப் பாடுபட்டவர் உலக வரலாற்றிலேயே வேறு எவருமிலர். ஆனால், அத்தகைய பெருந்தகதி சான்ற சான்றோரான பெரியாரைப் பற்றி மிகமிகத் தவறான விளம்பரத்தை — இழிவான, தீய நோக்கோடுகூடிய இகழ்வை — நெடுங்காலமாக நேர்மையற்றோரும் பொய்ம்மையே பரப்பும் ஏடுகளும், அறநெறியை மதிக்காத அமைப்புகளும் ஆராய்ச்சித்திறனில்லாத கயவரும் பரப்பிவந்துள்ளனர்; இன்னமும் பரப்புகின்றனர்.

பெரியார் கூறுவதை அப்படியே திசை மாற்றிக் காட்டி ஆய்வறிவற்ற மக்களை எரிச்சலடையச் செய்வது பல ஏடுகளுக்குப் பழக்கம்!

மக்களுக்குப் பகுத்தறிவு மனப்பான்மை வந்து விடக் கூடாதே என்ற ஆற்றாமையால், அச்சத்தால் சுரண்டிப் பிழைப்போர் பெரியார் மீது சீற்றமும் வெறுப்பும் பகையும் கொள்ளுமாறு மக்களை 'உசுப்பி' விடுகின்றனர் என்பதை அறிவுள்ளோர் உணர்வர்.

பெரியார் மக்களை மிகமிக விரும்பி அன்பு பாராட்டினார். எல்லா மக்களின் நலனுக்கும், நல்வாழ்வுக்கும், நல்லுரிமைக்கும் நல்லுறவுக்கும் தம் வாழ்க்கை முழுதும் போராடினார்.

பெரியார் தனியார் எவரையும் வெறுக்கவில்லை; பழிக்கவில்லை; பகைக்கவில்லை. திருடனை வெறுக்கிறோம் என்பதற்காக நம்மை 'வெறியர்' எனப் பிறர் கூறினால், நாம் அதை ஒப்புவோமா? கற்பழிக்க வருபனைப் பகைப்பது நன்றா? தீதா? கொலை செய்ய வருபவனை எதிர்ப்பது குற்றமாகுமா?

குமுகாயத் திருட்டை, இனக்கொலையை — மொழி — பண்பாட்டு — முன்னேற்றக் கற்பழிப்புகளைப் பெரியார் எதிர்த்தார்; பழித்தார்; பகைத்தார்; போராடினார்; வென்றார்!

நம் நாட்டில் வாழ்ந்து கொண்டே நம்மவரை நசுக்கியும் சுரண்டியும் கொழுத்த முதலைக் கூட்டத்தைக், கள்ள உள்ளத்து இரண்டகக் குள்ளநரிக் கும்பலை அடையாளம் காட்டினார். ஏமாறிய மக்களை விழித்தெழச் செய்தார். கயவரைப் பழித்தார்; கள்வரைத் திருத்த முயன்றார்; கொடியரை எச்சரித்தார்; முதலாளிக் கும்பலுக்கு, எதிராகப் போர்க்கொடி உயர்த்தினார். இதைத் தவறு என்பதா? அப்படிக் கூறுபவர் யாராக இருக்க முடியும்?

மக்களுக்காக, மக்கள் தன்மையை உயர்த்தி மலர்த்துவதற்காக, எந்த வகை அடிமைத்தளையையும் அகற்றுவதற்காக மக்கள் மீது உண்மையன்பு பாராட்டிப் பாடுபட்டவர் பெரியாரே. மாக்களை மக்களாக்கியவர் பெரியார். மிகச்சிலர் மிகமிகப்பலரை

www.thamizham.net - Free E book No 7520

அடிமைகளாக்கி அணு அணுவாக நூற்றுண்டு நூற்றுண்டுகளாகச் சிறைப்படுத்தியிருந்த கொடுமையிலிருந்து விடுதலை செய்வித்தார் பெரியார். அடிமைகளுக்கு உணர்வூட்டி உரிமையூட்டி அறிவூட்டி அறம் புரிந்தார் பெரியார்.

உண்மைக்காக, நேர்மைக்காக, அறத்திற்காக, மக்கள் தன்மைக்காக, அறிவுக்காக, விடுதலைக்காகப், பண்பாட்டுக்காக, ஆராய்ச்சித் திறனுக்காக, மொழியுரிமைக்காக, மகளிர் உரிமைக்காகத் தொழிலாளர்க்காக, பொதுவுடைமைக்காக, நாகரிக மலர்ச்சிக்காக, ஒழுக்கத்திற்காக, கலையின் விளக்கத்திற்காக, அடிமைத்தளை அறுபட்டு உரிமையொளி பூப்பதற்காகப் பாடுபட்டவர் பேரறிஞர் பெரியார்.

கடவுள் பெயரால், கோவிலின் பெயரால், சமயத்தின் பெயரால் சாதியின் பெயரால், மூட நம்பிக்கையின் பெயரால், சாத்திரங்களின் பெயரால், கட்டுப்பாடுகளும் முள்வேலிகளும் அமைத்து, இயற்கையான வாழ்வியக்கத்தைக் கெடுத்து, மக்களை மாக்களாக்கிய மதம் பிடித்தோரைப் பெரியார் சாடினுர்; புறங்காட்டியோட வைத்தார்.

நோயை வெறுப்பது நோயாளியை வெறுப்பதாகாது. நோய் நீங்கும் வரை கசப்பு மருந்தை நோயாளி உண்டுதான் தீர வேண்டும். தீமையை வெறுப்பதோடு, அதன் வேரும் நுனிவேரும் இல்லாத படி களைவதே அறமாகும். கொடுமையை வெறுப்பதே நல்ல கடமையாகும். கயமையை யொழிப்பதே சான்றுண்மையாம். இழிவை யழிப்பதே சிறப்பாம். பொய்மையைப் பொசுக்கினுல்தான் வாய்மை வெல்லும். களவைக் களைந்தாலொழிய கவலை மாறுமா? அடிமைத்தளையை அறுத்தாலொழிய உரிமையொளி தோன்றுமா? சுரண்டலை எல்லா வகையிலும் எல்லா நிலையிலும் முழுவதுமாக ஒழித்தால்தான் சுவை வாழ்வை மக்கள் அடைய முடியும்.

உள்ளுக்குள் ஊழலை வளர்த்துக் கொண்டே வெளிக்கு மட்டும் 'ஊழல் ஒழிக'' என்ற முழக்கம் நேர்மையானதா? மொழி — இனம் — நாடு — பண்பு — அனைத்து நிலை அடிமைத் தனத்தையும் அழிக்கப் பெரியார் பகுத்தறிவு நெறி வளர்த்தார்.

கடவுள், சமயம், வேதம், சாத்திரம், மிருதி, மனு, வடமொழி, மூடநம்பிக்கைகளின் இழுக்குகளை, அழுக்குகளை அணு அணுவாக அலசி ஆராய்ந்து அம்பலப்படுத்திய அறிவியல் அறிஞர், ஆராய்ச்சிப் புலவர்தான் இயற்கைச் சான்றேர் பெரியார்!

உண்மையைப் புதை குழியிலிட்டு புதைத்த நாட்டில் உண்மை வெல்ல உரிமை ஓங்கப் பாடுபட்டவர் பெரியார். வரலாறனவர் பெரியார்! முன்னர் தீண்டாமையை ஆணவக் குரலில் முழங்கி அதிகாரக் குரலில் கூறியவர்கள், இன்றும் அச்சக்குரலில் இசைக்கதையில் இறைவழிபாட்டில் முழங்கிக் கொண்டுதான் இருக்கின்றனர் என்பதை நாம் மறக்கக் கூடாது.

www.thamizham.net - Free E book No 7520

இன — குல வேற்றுமைக்குக் 'குடி கெடுக்கும் குடிப்பாட்டு கட்டுபவர்' சிலர் தாளம் போட்டு வயிறு வளர்ப்பதையும் நாம் கணிக்கத் தவறக் கூடாது!

பெரியாரின் பெருந்தொண்டால் தமிழுணர்ச்சி எழுந்தது. தமிழினம் தலை நிமிர்ந்தது; தன்மானம் சிறந்தது; வாழ்வியலில் பல துறைகளிலும் தமிழர் முன்னேறினர். பல்லாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டிருந்த தமிழினம் பெரியாரின் ஒரு நூற்றாண்டு வாழ்வால் — வரலாற்றுப் புகழார்ந்த தொண்டினால் — புதிய வரலாறு படைத்துக் கொண்டிருக்கிறது என்பதைப் பெருமிதத்தோடு தலை நிமிர்ந்து கூறலாம். கூற வேண்டும்!

பெரியார் நன்றியை எதிர்பார்த்துப் போராடவில்லை. தமிழர் நன்றியுணர்வற்றவர்தாம் என நன்கு உணர்ந்தே பாடுபட்டார். முதுமையையும் மதியாமல் மக்கள்பணி புரிந்த முதறிவாளர் பெரியார் என எண்ணும்போது மனமுள்ளோர் கண்களில் விழியமுது சுரக்காதோ!

இந்த நாட்டின் குறைபாடுகளுக்கு 'மூலத்தை' முதலில் கண்டுணர்ந்த தேர்ந்த மருத்துவர் பெரியாரே. அவர் தமது தொண்ணூற்று மூன்றாம் ஆண்டு பிறந்தநாள் செய்தியில் உணர்த்தும் அறிவுரையை நாம் மறத்தலாகாது.

"உண்மையில் எனது தொண்டு சாதி ஒழிப்புத் தொண்டுதான் என்றாலும், அது நமது நாட்டைப் பொருத்தவரையில் கடவுள், மதம், சாத்திரம், பார்ப்பனர் ஒழிப்புப் பரப்புதலாகத்தான் முடியும். இந்த நான்கும் ஒழிந்த இடம்தான் சாதி ஒழிந்த இடமாகும். இவற்றில் எது மீதி இருந்தாலும் சாதி உண்மையிலேயே ஒழிந்ததாக ஆகாது. ஏனெனில், சாதி இந்த நான்கிலிருந்தும் ஆக்கப்பட்டதேயாகும்.

இப்போதும் சொல்வேன்; நாகரிகத்திற்காகச் சிலர் சாதி ஒழிய வேண்டும் என்று கூறுகிறார்கள், ஆனால் அவர்கள் மேற்கண்ட நான்கையும் ஒழிக்கத் துணிவு கொள்ள மாட்டார்கள். அப்படிப் பட்டவர்களால் நமக்கு ஒரு பயனும் ஏற்படாது. சில சமயங்களில் அவர்கள் நமக்கு எதிரிகளாகவும் ஆகக் கூடும். மாந்தனை மடயனாக, அடிமையாக ஆக்கப்பட்ட பின்புதான் சாதி புகுத்தப்பட்டதாகும். உரிமை உணர்ச்சியும் அறிவும் ஏற்படாமல் சாதியை ஒழிக்க முடியாது. மடமைக்கும் அடிமைத் தன்மைக்கும் ஆக்கம் அளித்துச் சாதியை நிலை நிறுத்துவதுதான்- சாதியை ஒழியாமல் பாதுகாப்பதுதான் -கடவுள், மதம், சாத்திரம், பார்ப்பனர் என்பவையாகும்"

— இது திட்டவட்டமான உண்மையே. ஏன்? சாதி முறை மனு நூலில் திட்டமிட்டு வற்புறுத்தப்படுகிறது. இதோ சான்றுகள்:

www.thamizham.net - Free E book No 7520

"அக்கினி எப்படி மேலான தெய்வமாகின்றதோ அப்படியே பிராமணன் ஞானியாயினும் மூடனாயினும் — அவனே மேலான தெய்வம்" (மனு: அ-9: சு. 317)

"பிணத்தை எரிக்கும் தீ, யாகத்திற்கும் பயன்படுதல் போலத் தீமையான காரியங்களைச் செய்யும் பிராமணர்களும் பூசிக்கப்படுவர். ஏனெனில் அவர்கள் **உயர்குலத்தோர் அல்லரோ?"** (மனு: அ — 9, சு: 318)

"சூத்திரன் இம்மையிலும் மறுமையிலும் பிராமணனுக்குப் பணிவிடை செய்ய வேண்டும்;"

"சூத்திரன் மனம் வாக்குக் காயங்களால் பிராமணனுக்குத் தொண்டு செய்ய வேண்டும். பிராமணனில்லாத விடத்தில் சத்திரியனுக்கும், அவனுமில்லாத விடத்தில் வைசியனுக்கும் தொண்டு செய்ய வேண்டும்" (மனு: அ. — 9. சு: 334 — 335)

"பிராமணன் கூலி கொடுத்தோ, கொடாமலோ சூத்திரனிடம் வேலை வாங்கிக் கொள்ளலாம். ஏனெனில் பிராமணனுக்குத் தொண்டு செய்யவே சூத்திரன் பிரமனால் படைக்கப்பட்டிருக்கிறான். (மனு: அ: 8, சு- 414)

"மற்ற மூன்று வருணத்தார்க்கும் தொண்டு செய்யும்படி சூத்திரனுக்கு அரசன் கட்டளையிட வேண்டும். அப்படிச் செய்யாவிடில் உலகம் அழிந்துவிடுமாகையால்' சூத்திரனைத் தண்டித்துப் பணிவிடை செய்யவைக்க வேண்டும். (மனு: அ 0 8, சு: 417)

"சூத்திரன் தேடிய பொருள்களைப் பிராமணன் தடையின்றிக் கைப்பற்றிக் கொள்ளலாம்; ஏனெனில் அடிமையாகிய சூத்திரன் எவ்வகை பொருளுக்கும் உரியவனாக மாட்டான்" (மனு: அ: 8, சு: 417)

"பிராமணனின் பொருளை எடுத்த சூத்திரனுடைய அங்கங்களை வெட்டிக் கொல்ல வேண்டும்; ஆனால், சூத்திரனுடைய பொருள்களைப் பிராமணன் தான் விரும்பியபடி கொள்ளையிடலாம். (மனு: அ. 9 - சு: 248)

"பிராமணனுடைய தொழிலைச் சூத்திரன் செய்தாலும் பிராமணனாக மாட்டான்; அவனுக்குப் பிராமணத் தொழில் செய்ய அதிகாரமில்லை. பிராமணன் சூத்திரனுடைய தொழிலைச் செய்தாலும் அவன் உயர்குலத்தவனேயாவான். இப்படியே பிரமா நிச்சயித்துள்ளார்' (மனு: அ, 10-சு: 75)

"பிராமணனைக் காப்பாற்றும் பொருட்டுப் பொய் சொன்னாலும் குற்றமில்லை. பிராமணரல்லாதாரைக் கொன்றாலும் பாவமில்லை" (மனு: அ: 8 — சு: 112)

"பிராமணனைச் சூத்திரன் திட்டினால் அவன் நாக்கையறுக்க வேண்டும்; பிராமணனுடைய சாதிப் பெயர்களைச் சொல்லித்திட்டும்

www.thamizham.net - Free E book No 7520

சூத்திரன் வாயில் காய்ச்சிய இரும்புக்கம்பியை எரிய எரியச் செருக வேண்டும்" (மனு - அ: 8 - சு. 280)

"சூத்திரன் மற்ற மூன்று வருணத்தாருடைய மனைவியைப் புணர்ந்தால் அவன் உயிர் போகும்வரை தண்டிக்க வேண்டும்", (மனு: அ: 8 சு: 359)

(பிராமணனுக்கு எவ்வகைத் தண்டனையுமில்லை)

"உயர்குலப் பெண்ணைப் புணர்ந்த இழிகுலத்தோனை இறக்கும் வரையில் அடிக்க வேண்டும்." (மனு:)

"கட்டுக் கடங்காமல் இட்டப்படி திரியும் பிராமணப்பெண்களைச் சூத்திரன் புணர்ந்தால் ஆண்குறியை அறுக்க வேண்டும். ஒருவர் கட்டுக்குட்பட்ட பெண்களைப் புணர்ந்தால் அவனைத் துண்டுதுண்டாய் வெட்டி அவன் பொருளையெல்லாம் கொள்ளையிடவேண்டும். (மனு- அ: 8— சு: 374)

"பிராமணன் எத்தகைய கொடிய குற்றங்களைச் செய்தாலும் அவனுக்குத் தூக்குத்தண்டனை ஏற்பட்டால் தூக்கில் இடக்கூடாது. அவன் தலையை மொட்டை அடித்தல் வேண்டும். அதுவே அவனுக்குத் தூக்குத் தண்டனைக்கு ஒப்பாம். மற்ற வருணத்தார்க்குக் கொலையே தண்டனை" (மனு: அ:8— சு: 379)

"கொடிய குற்றம் செய்தவனாயினும் பிராமணனைக் கொல்லாமலும் வேறு எத்தகைய துன்பமும் செய்யாமலும் பொருளைக் கொடுத்து அவனை அயலூருக்கு அனுப்பி விட வேண்டும். எத்தகைய குற்றஞ் செய்தாலும் பிராமணனைக் கொல்ல அரசன் நினைக்கலாகாது.(மனு— அ: 8— சு: 380 — 381)

"சூத்திரன் எவ்வளவு திறமையுள்ளவனாயினும் தனக்கெனத் தனியாகப் பொருள் சேர்த்து வைக்கலாகாது. சூத்திரனிடம் பொருள் இருந்தால் பிராமணனுக்குத் துன்பம் வரும்" (மனு: அ—10 —சு: 129)

"பிராமணன் உண்டு மிகுந்த உணவும், கட்டிக் கிழிந்த உடையும், சுவையும் சாரமும் அற்ற தானியங்களையும் பிராமணன் பார்த்துச் சூத்திரனுக்குக் கொடுக்க வேண்டும். (மனு: அ. 10— சு. 125)

"பிராமணன் வைசியனிடமுள்ள பொருளைக் கேட்டுக் கொடுக்காவிடில் வலிமையாலாவது களவினாலாவது யாகத்திற்கு வேண்டிய பொருளைப் பிராமணன் எடுத்துக் கொள்ளலாம். வைசியனிடமில்லாவிடில் சூத்திரன் வீட்டிலிருந்து ஏராளமாக ஆராய்ச்சி செய்யாமலேயே கேளாமலேயே வலிமையினால் கொள்ளையிட்டு எடுத்துக் கொள்ளலாம்" (மனு: அ.10 — 12: 13)

"தரும சிந்தனையுள்ள அரசன் இவ்விதம் கொள்ளையிட்டு யாகம் செய்யும் பிராமணர்களைத் தண்டிக்கக் கூடாது.அரசனின் அறியாமை

www.thamizham.net - Free E book No 7520

யால் பிராமணன் பசித்துன்பத்தை யடைகிறான்'' (மனு: அ. 10— சு: 123)

''பிராமணனுக்கு வேதம் ஓதலே தவம்; சத்திரியனுக்கு இந்நூலில் சொன்னபடி செய்தலே தவம்; வைசியனுக்கு வர்த்தகம் செய்தலே தவம் — சூத்திரனுக்குப் பிராமணனுக்குப் பணிவிடை செய்தலே தவமாகும்'' (மனு: அ: 11— சு: 235)

''இதில் சொல்லும் கருமங்களில் தவறிய அரசன் மலம், பிணம் இவைகளைத் தின்னும் கடபூதம் என்னும் பேயாகப் பிறப்பான். மேற்சொன்ன — வேத — மிருதிகளுக்கு அடங்காமல் மாறுபட்டு நடக்கும் சூத்திரன் சீலைப்பேனைத் தின்னும் பேயாகப் பிறப்பான். (மனு: அ— 12 — சு: 71,72)

''பிராமணனுக்குச் சூத்திரப் பெண்ணிடம் பிள்ளை பிறந்தால் அப் பிள்ளைக்கு அப் பிராமணன் சொத்தில் உரிமையில்லை. அப் பிள்ளை சிரார்த்தம் செய்யலாகாது. அவன் உயிரோடிருப்பினும் பிணத்துக்குச் சமானமானவன்'' (மனு: அ: அ — சு: 155 —178)

இப்படிப்பட்ட நூல் அற நூலாம்! அருள் நூலாம்! கடவுள் போற்றும் அரிய நூலாம்!

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்னும் குறள் நெறி போற்றிய நாட்டில் மனு நூலைக் காட்டி ஏய்த்துப் பிழைத்தவர்களை இடித்துக் கூறித் திருத்திய சீர்திருத்தப் பெருந்தொண்டினை — வீரப்பணியைப் — பேராண்மையைச் செய்தவர் நம் பெரியார்.

பெரியார் பிறவாமலிருந்தால் ....

அப்பப்பா! நினைக்கவே திடுக்கிடுகிறது.

மனு நூலின்படியே தமிழர் அடிமைகளாய் இழிபிறவிகளாய் ஓடேந்திகளாய் — உயிருள்ள பிணங்களாகக் கிடந்திருப்பர்!

இன்றுள்ள நல்வாழ்வு தமிழருக்கு வாய்த்திருக்குமா என்பதை அறிவுள்ள தமிழர் எண்ணி உணர வேண்டும்.

பெரியாரால் தானே நாம் தன்மானத்தோடு, தன் மதிப்போடு, ஆண்மையோடு, அஞ்சாமையோடு, உரிமையோடு, பகுத்தறிவோடு, பெருமையோடு வாழ முடிகிறது.

அத்தகு பெரியாருக்குத் தமிழர் இயற்றிய நன்றிதான் யாது? பெரியாரின் பெருநெறியில் — பகுத்தறிவாளராக — வாழ்வது ஒன்றே போதும்.

தமக்குவமையில்லாதார் பெரியார்! அவர் கொள்கை சேர்ந்தார்க் கல்லால் இனக் கவலை மாற்றல் அரிதுதான்!

இனி —

1) தமிழ்நாட்டில் அரசியல் கட்சிகளின் தலைமையில் தமிழரே அமைய வேண்டும்.

www.thamizham.net - Free E book No 7520

தக்கன செய்க!

—பாவலர் அறி இ.

விந்திய மலைக்கு மேற்கிலும் வடக்கிலும்
இந்தியில் எல்லா அறிவியல் நூல்களும்
உடனுக் குடனே மொழிபெயர்த் தளிர்த்திடக்
கொடையெனும் பெயரில் கோடிப் பணத்தை
கொட்டிக் கொடுக்கும் நடுவண் அரசு.

பெட்டியை நிரப்பப் பெரும்பணம் தேடும்
நோக்கம் கொண்ட நம் நொள்ளையர் அரசோ
தூக்கம் கொண்ட துக்குறி போல
இம்மொழித் துறையில் எந்தவோர் முயற்சியும்
இம்மி யளவும் எடுக்கவே இல்லை!

அப்படி இப்படி அமைவுரை சொல்லி
ஒப்பாய்ச் செய்கென ஒரு குழு அமைத்தால்
உண்மையை எழுத உள்ளம் நடுங்கும்!
பெண்மைத் தனம்மிகு பித்தரே அங்கே
அறிஞர் பெயரில் ஆட்டம் இட்டடிக்

(முன் பக்கத் தொடர்ச்சி)

2) ஆட்சிப் பொறுப்பில் - அலுவலர் யாவரும் தமிழரே யாதல் வேண்டும்.

3) வாணிகம், தொழிற்றுறைகளில் பார்ப்பனர் நுழைந்து வளஞ் சேர்க்கின்றனர். அந்நிலை மாறிட அத்தகு துறைகளிலும் தமிழரே மிகவும் நுழைந்து செழித்தல் வேண்டும்.

4) பார்ப்பனியத்தை வலியுறுத்தும் வாழ்த்தும் ஆட்களும், அமைப்புகளும், சட்டதிட்டகளும் வன்முறையாலோ, நன்முறை யாலோ எச்சமின்றி அழித்தொழிக்கப்படல் வேண்டும்.

5) பெரியாரின் பேச்சு, எழுத்து எல்லாம் உடனே நாட்டுடைமை ஆக்கப்பட வேண்டும். தமிழக அரசு அந் நூல்களைப் பதிப்பித்து எங்கும் - எவர்க்கும் - பரப்புதல் வேண்டும். பெரியார் கருத்து பரவு வதே பெரியாருக்கு அழியாத நினைவுச் சின்னமாகும்.

6) கோவில்களின் செல்வமெல்லாம் தொழில்துறைக்கும், மக்கள் நலத்திட்டத்திற்கும் ஆக்க வேண்டும்.

7) பொதுவுடைமை நெறியில் நாடும் அரசும் உடனடியாக அமைக்கப் பெறுதல் வேண்டும்.

தமிழினமே, பெரியார் கருத்துகளை உலகெல்லாம் பரப்புக. செயல்வழி கடைப் பிடிக்க!

வெல்க பெரியாரின் கொள்கை!

வாழ்க பெரியார் புகழ்!

www.thamizham.net - Free E book No 7520

குறியுடன் நம்மனோர் குளிர்தமிழ் மொழியின்
செம்மையை மறைத்துத் திரித்துப் பேசிப்
பம்மல் செய்யும் பட்டந் தாங்கியர்
கூடி வந்திடும் கூட்டமாய் இருக்கும்!
எல்லாத் துயரையும், எதிரிகள் விளைக்கும்
பொல்லாத் தனத்தையும் பொறுத்துக் கொண்டு
கழிபெரும் உவப்புடன் எங்கோ ஒருசிலர்
மொழிமுன் னேறிட முயற்சிகள் செய்தால்
துணையா யாகியித் தமிழக அரசு
தணிவாய்த் தக்கன தரலா காதா?

தக்கன அனைத்தையும் தானே தேடி
மூக்கி முணகி மூலையில் ஒருவர்
மொழியியல் தன்னில் முனைந்தார் என்றால்
எழுந்திடும் எதிர்ப்புக் கணைகளை யாவது
புறந்தடுத் தடக்கிஇப் புதுத்தமிழ் அரசு
திறம்பட அன்னோர் செயலகள் ஆற்றிடப்
பாதுகாப் பாவது பயத்தலா காதா?
என்ன மடத்தனம்? என்ன நரித்தனம்
நன்மை செய்யவே ஆட்சி நடக்குதாம்! (?)
தின்னப் பிறந்தஇத் தமிழரின் திரிபுதான்
அனைத்தையும் விளைத்தது; அழிவினைத் தந்தது.
இனிப் பொறுத் தோமெனில் இனமும் மொழியும்
அழிவது திண்ணம்!

ஆதலால் தமிழரே,
கழிந்தவை எல்லாம் கழிந்ததா கட்டும்;
இப்பொழு தேனும் இமைகளைத் திறப்பீர்!
செப்புமுன் தாய்மொழி சிறப்புடன் மிளிர
"எல்லாத் துறையையும் இதன் வழி ஆயலாம்,
எல்லாக் கலையையும் இதன்வழி ஆக்கலாம்,
என்று வேற்றவர் தெளிவுறும் வண்ணம்
இன்றே செயல்செய எழுச்சியோ டெழுக!
"பயிற்று மொழியில் பைந்தமிழ் இருந்தால்
அயல்மொழி ஆய்வுகள் அறிதல் அரிதாம்"
என்று பிதற்றும் இழிஞரின் உரைகள்
பொய்யென ஊர்க்குப் புரியும் வகையில்
ஆக்கச் செயல்கள் அமைவுறப் புரிக!
தூக்கம் பிறகெனத் துடிப்புடன்
தமிழினை யோரே, தக்கன செய்கவே!

www.thamizham.net - Free E book No 7520

இம் மாதச் சிறப்பு மடல்:

அண்ணா விழுந்த சதுப்புக் குழியில் விழாதீர்கள்! கடந்த வரலாற்றிலிருந்து பாடம் பெறுங்கள்! நீங்கள் புதிய வரலாறு படையுங்கள்!

0: 911: மதிப்புக்குரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம்; வாழ்க 'தென்மொழி' சுவடி 18 ஓலை 8 படித்து முடித்த போது என் மனத்தில் ஒரு பெரும் துயரம் சூழ்ந்து கொண்டது. காரணம் இரு செய்திகள்.

1. சென்னை சொல்லாய்வுக் கூட்டம்:—

பாவாணர் எனும் பேரறிஞர் தம் வாணாள் முழுவதையும் செல வழித்துத் தொடங்கி இடையில் விட்டுப்போன பேரகரமுதலிப் பணியைத் தொடர்வதற்கு உரியவரைப் பொறுக்கியெடுத்துத் திரட்டி அப்பணியை ஒருங்கு படுத்தக் கடமைப் பட்டவர் தாங்கள். யாரை இயக்குநராக்குவது யார் இயங்குவது என்று பாராமல் எப்படி இயங்குவது என்று ஆய்ந்து எப்படியாவது செயல்படுத்தியே தீர வேண்டியது,பாவாணருக்குப் பின் மூப்பரான தங்கள் பொறுப்பு மாறாக நீங்கள் இயக்கத்தை உடைத்து தமிழ்நாட்டின் சொல்லாய்வுத்திறனைப்பிளவு படுத்தியுள்ளீர்கள்.பிளவுபடுத்தி உங்கள் பக்கத்து அணியை எங்கே கொண்டு நிறுத்தியுள்ளீர்கள்? தமிழ், வடமொழி, பிறஇந்திய மொழிகளின் ஆராய்ச்சி நிறுவனத்தில்! எந்த நிறுவனத்தைப் பார்ப்பனரின் கூடாரம் என்று தென்மொழியில் திட்டினீர்களோ அங்கு. அரங்கம் நிறைய அமர்ந்திருந்த சமசுக்கிருதப் பேரறிஞர்களும் புலியூர்க் கேசிகன் முதலியோரும் தனித்தமிழ் ஆக்கத்துக்கு உதவுவார்களென்று கருதுகிறீர்கள்? தமிழர்களின் போர்ப் படைகளில் எப்போது பிளவின் அறிகுறிகள் தோன்றும்; எந்தப் பிரிவை எளிதில் கைக் கொள்ளலாம் என்று 'கண்குத்திப் பாம்பாகக்' காத்திருக்கும் பார்ப்பனர் கைகளில் தனித்தமிழ் இயக்கத்தை உங்கள் திருக்கைகளாலே மனமுவந்து ஒப்படைத்திருக்கிறீர்கள்.

2. சென்னையில் இசைக் கலைவிழா

அண்ணாமலையாரின் தமிழிசைச் சங்கம் அது நிறுவப்பட்ட போதே பார்ப்பனர்களின் ஆட்சிக்குள் வந்து விட்டது. பார்ப்பனரல்லாதாரிடமிருந்து ஆதரவு பெற முடியாமல் அண்ணாமலையரசர் தத்தளித்தபோது ஆச்சாரியாரும் கல்கியும் அங்கே புகுந்து கொண்டனர். இசையாய்வு நிகழ்ச்சிகளில் பெரும்பாலும் பார்ப்பனரே தலைமை தாங்குகின்றனர். கருணாநிதி முதலமைச்சராயிருந்தபோது கலந்து கொண்டு பார்ப்பனர் முன் தம் 'புலமை'யைக் காட்டிப் பெருமைப் பட்டார். தாங்கள் முதலமைச்சராகு முன்பே அதைச் செய்துள்ளீர்கள். தங்கள் 'தூய தமிழ் வளர்க்கும் கொள்கையினையும் வினைப்பாடுகளையும், நேர்மையையும், விடா முயற்சியையும் பலவாறு பாராட்டிப் பேசியதுடன் தங்கள் அரிய உரைத் திறத்தையும் கருத்துகளையும் மிகவாகப் புகழ்ந்து'' திரு. பகீரதன் கூறியதாகத்

www.thamizham.net - Free E book No 7520

'தென்மொழி'ச் செய்தி கூறுகிறது. தனித் தமிழின் வலிமையையும் தேவையையும் வலியுறுத்தினரா என்பது தெரியவில்லை.

திரு நா. மகாலிங்கம் அவர்கள் கேட்பதற்காகத் தங்கள் **பேச்சை மட்டும்** வார்ப்பதிவு செய்ததாகவும் தெரிகிறது. இச் செய்தியிலிருந்து தெளிவாகும் ஓருண்மை தமிழர் தலைவர்களுக்கு இயல்பாக வுள்ள தந் நம்பிக்கையின்மை பெரியார், அண்ணா போன்று உங்களையும் மிகவும் பற்றியிருக்கிறதென்பதே. பெரியார் 'இந்துவில் போட்டிருக்கான்', 'எக்சுபிரசில் போட்டிருக்கிறான்' என்பார். அண்ணாவும் பார்ப்பனரும் பார்ப்பன ஏடுகளும் தம்மையும் தம் இயக்கத்தையும் புகழ்வதைப் பெரிது படுத்திப் போடுவார். அதுபோல் பார்ப்பனர் புகழ்ந்தால்தான் நம் தகுதி மெய்ப்பிக்கப்படும் என்ற உணர்வை வெளிப்படுத்தியிருக்கிறீர்கள். ('கனிச்சாறு' திறனாய்வை 'இந்து'விலிருந்து பெயர்த்து வெளியிட்டதும் இவ்வுணர்வின் வெளிப்பாடே!)

அது போன்றேதே தாங்களும் திரு. அருளியும் தொலைக்காட்சியில் தோன்றுவதும். பார்ப்பனக் கூடாரத்திலே நுழைந்து விட்டோம்; நம் கொள்கைகளை நுழைத்து விட்டோம் என்று மனப்பால் குடிப்பதில் பொருளில்லை. பார்ப்பனக் கூடாரத்தினுள் நுழைந்தோர் முழுமையாகச் சொந்த கூடாரத்துக்கு உதவியதாக வரலாறு கிடையாது. ஆச்சாரியாருடன் பெரியார் தனிப்பட்ட நட்பு வைத்திருந்திருந்தார். அவர் இவரின் திருமணத்திற்கு அறிவுரை வழங்கினரா இலலையா என்பதும் நமக்குத் தெரியாது, ஆனல் அந்த நட்பு பெரியாரின் இயக்கத்தை உடைக்க எண்ணியவர்களுக்கு எளிதாகப் பயன்பட்டது.

பார்ப்பனர்களைப் பயன்படுத்துவதாகக் கருதி அண்ணா ஆச்சாரியோடு தேர்தல் உடன்பாடு கொண்டார். ஆச்சாரியார் மூதறிஞர் இராசாசி ஆக மாறினர்; பார்ப்பன எதிர்ப்புணர்வு மழுங்கியது. "பார்ப்பனர் பதபபட்டு விட்டனர்; திருந்தி விட்டனர்' என்று தொண்டர்கள் நம்பினர்; நம்ப வைக்கப் பட்டனர். ஆனல் அவர்கள் பதப்படவில்லை, பதுங்கவே செய்தனர் என்பது இன்று ஐயத்திற்கிடமின்றித்தெரிகிறது. அதைத்தான் '**பெரியார் விதைத்தவை நச்சு விதைகள் என்றால்** ......" என்று இதே இதழில் ஆசிரிய உரைப் பகுதியில் பாடித் தீர்த்திருக்கிறீர்கள்.

'எமக்கு அறிவும் உண்டு ஆற்றலும் உண்டு" என்று அரச தந்திரம் கூறலாம் தாங்கள். ஆனல் தாங்கள் தலைமேற் கொண்டுள்ளது. ஒரு சிலர் செயற்படும் அரசியற் களமல்ல. ஒரு பெரும் மக்கள் கூட்டம் பங்குபெறவிருக்கும் பேரியக்கம். தலைவர்கள் திடீரென்று இயற்கையெய்தலாம். அப்போது பின்வருவோர் எளிதில் நடத்திச் செல்லுமாறு இயக்கச் செயல் திட்டங்கள் இருக்க வேண்டும். எதிரியை

www.thamizham.net - Free E book No 7520

நல்லோட கூழக்கு நாணும் மாண்பும்!

புலவர். ச.சிவசங்கு

பிடவு என்னும் பூஞ்செடி, வெண்மையான உச்சிகளைக் கொண்ட புதர்களின் ஊடே மாலைபோலப் பூத்து நின்றன. இத்தகைய மலர்களால் குளிர்ந்த மணம் பரப்பும் முல்லை நிலம் அது. செருப்பு அணிந்த காட்டு வேடன், முட்சுமையைத் தூக்கும் பொருட்டுத் தோளிலே கவைக் கம்பு வைத்திருக்கும் காட்சி போல, பெரிய முறுக்கிய கொம்புகளையுடைய அண்ணல் இரலை - ஆண்மான் - தோன்றும்.

செறிந்த இலைகளையுடைய அறுகம் புல்லைத் தன் பேடைக்கு அருத்தியது. பக்கத்திலே மான் மறி துள்ளிக்குதித்து ஓடி ஆடி விளையாடுகிறது! அது கண்டு மகிழ்ந்த அவ்வாண்மான், ஆற்றுப் படுகை அருகே தெளிந்தோடும் நீரையும் அவற்றைக் குடிப்பிடித்தது. பெண்மான் அசை போட்டுக் கொண்டு படுத்து இருந்தது. அவ்விடத்தில் தன் மறியையும் பெண்மானையும் காவல் செய்து பெருந்தன்மையோடு நின்றது.

பெருந் தகைக்கு உடைந்த நெஞ்சம்.

தலைவன் ஒருவன், தான் வெளிநாடு சென்று தான் மேற்கொண்ட வினையை நிறைவு செய்து கொண்டு, தன் காதல் மனை

(முன்பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரிசையிலேயே வைத்திருக்க வேண்டும். எதிரி மீது இயக்கத் தொண்டர்களுக்கு மென்மையுணர்வு தோன்றுவதற்கு உதவும் எந்த நடவடிக்கைகளிலும் தலைவர்கள் ஈடுபடக் கூடாது.

பார்ப்பனரும், உணர்வு படைத்த பார்ப்பனரல்லாதோரும் இன்று இரு முகாமையான எதிர்அணிகள். பார்ப்பனர்களிடமிருந்து நமக்கு உதவி செய்வோர் யாரும் கிடைப்பார்களென்று நினைப்பது வெறும் பகற்கனவே.இங்கிருந்து வீரப்பன்களும்,கண்ணதாசன்களும் அங்கு சென்ற வரலாறுகள் ஏராளம். ஆனால் அங்கிருந்து இங்கு தாவிய 'எட்டப்பன்' எவனையாவது காட்ட முடியுமா? முடியாது. அது நமது குமுகாயச் செயல் நெறி. அடக்கி ஒடுக்கப்படும் அடிமைக் குமுகாயத்திலேயே ஐந்தாம் படையினர் தோன்றுவார்.

எனவே எதிரி யாரென்றும் நம்மவர் யாரென்றும் இனங்கண்டு செயற்பட வேண்டுகிறேன். தம் புகழைத் தம் வாணாளிலே தம் காதாரக் கேட்டு மகிழ வேண்டுமென்ற விருப்பத்தைச் எல்லை மீறி வளர விட்டவர்களால் எந்தச் செயலையும் ஆற்ற முடியாது என்பதை அடிக்கடி மனதில் கொண்டு வாருங்கள்! அண்ணா விழுந்த சதுப்புக் குழியில் நீங்களும் விழாதீர்கள்! கடந்த வரலாற்றிலிருந்து பாடம்பெறுங்கள்!வரலாறு மீள்வதை அஃதாவது மீண்டும் மீண்டும் புறப்பட்ட இடத்துக்கே திரும்பும் நச்சுச் சுழற்சியை உடைத்துப் புது வரலாறு படையுங்கள். அன்புடன் செ. பெரியநாடன், மதுரை-2

www.thamizham.net - Free E book No 7520

யானைக் கண்டு மகிழும் பொருட்டுக், குதிரை பூட்டிய தேரில், வீடு நோக்கி வந்து கொண்டு இருக்கிறான். மானின் பெருந்தகைமையைக் கண்டு உள்ளம் உடைந்து போனான். நாமும் மனைவி மகவொடு மகிழ வாய்ப்புக் கிட்டாது இத்தனை நாளும் போயினவே என அவன் உள்ளம், அவற்றின் சேர்ந்த கூட்டு வாழ்வாகிய பெருந்தகைக்கு உடைந்தது.

அடடா! என்னே இம்மானின் பெருந் தகைமை!! புல்லும் நீரும் அருத்திக் காத்து நிற்கும் காட்சி! நாமும் நம் மனையாட்கு உணவு வழங்கவும், மகவொடு மகிழவும் ஆன தலையளி செய்யப் பெற்றிலோமே என்ற தளர்ந்த நெஞ்சு உடையனாகிற்று.

"துஞ்சு புறங்காக்கும், பெருந்தகைக்கு
உடைந்த நெஞ்சம் தலையளி செய்து
இன்புற வேண்டாவோ!!

எகினம் (அன்னம்) விளையாடும் காப்புடை இல்லம்:

ஆடையிலே பற்றியுள்ள பசையைக் கரைத்துவிடும் மென் விரல்களையுடைய வண்ணத்தி பெருந் தோள்களை உயர்த்தி ஆடைகளைத் துவைக்கின்றாள். துவைத்த துணியில் சேர்த்தது போக எஞ்சிய கஞ்சிப் பசையினைத் தெளிநீர் ஓடையில் அலசி விட்டால் போன்ற நிறமுடைய தூய மயிரினையுடைய எகினம் (அன்னம்) தன் பெடையோடு விளையாடித் திரியும். இக் காட்சி தலைவனை நினைப்பிக்கக் கரணியமாயிற்று தலைவிக்கு. கட்டுக் காவலையுடைய வீட்டைச் சுற்றிய எல்லைக்குள் தலைவி தனித்திருப்பாள். எனினும், தாயத்தார் பலரும் அவ்வீட்டில் உள்ளனர்.

"பசை கொல் மெல்விரல் பெருந்தோள் புலைத்தி
துறை விட்டன்ன தூ மயிர் எகினம்
துணையொடு வதியும் காப்புடை வரைப்பு"

நீரில் கரைந்த பசை நீரோடு கலந்தநிறம் அன்னத்தூவிக்கு உவமை காட்டிய பேரழகு நீள நினைந்து காணத்தக்கது.

இத்தகைய இல்லிலே ஒரு பக்கம், சிவந்த மாலை அணிந்தது போன்ற கழுத்தினையுடைய பசுங்கிளியைத் தன் முன் கையில் ஏந்தினாள். அதனோடு பேச முற்படுகிறாள்.

கிளியோடு மழலை பயிற்றுவதை வீட்டில் உள்ளோர் காணின் என் செய்வது — அறிந்து கொள்வார்களோ என அஞ்சியவளாய் மென்மையாக "நம்மைப்பிரிந்து சென்ற நம்தலைவரைப்பற்றி நீ ஏதாவது சொல்ல நினைப்பாயாயின் அவர் இன்று வருவார் என்று உரைப்பாய் என மழலை இன்சொல் பயிற்றும் நாண் பெரிதுடையாள். இத்தகைய நாண் மிக்க நம் தலைவியின் மாண்பமைந்த நலத்தைத் துய்த்து மகிழ, தேரைச் செலுத்தும் நல்ல திறமைவாய்ந்த பாகனே! நம் தேரை விரைந்து செலுத்துவாய் என்றான் தலைவன்.

www.thamizham.net - Free E book No 7520

"செந்தார்ப் பைங்கிளி முன்கை ஏந்தி
இன்று வரல் உரைமோ சென்றிசிஞோர் திறத்தென
மழலை இன்சொற் பயிற்றும்,
நாணுடை அரிவை மாணலம் பெறவே"

'செல்க தேரே நல்வலம்பெறுந' என்பது மதுரை மருதன் இளநாகனார் அகம் 34-ஆம் பாட்டில் நமக்குக் காட்டி மகிழ வைக்கும் இவ்வெழுத்தோவியம் எத்தகைய இன்னுணர்வைத் தருகிறது!!

வழியில், மறி விளையாடும் மருங்கில் அண்ணல் இரலை தன் பெடைக்குப் புல்லும் நீரும் அருத்தித் துயில்வித்துக் காவல் செய்யும் பெருந்தக்க செயலுக்குத் தலைவன் நெஞ்சம் உடைகிறது.

தூமயிர் எகினமும் (அன்னமும்) பெடையும் திளைத்து விளையாடும் காட்சி, தலைவிக்குத் தலைவன் அன்பை நினைந்து வருந்தச் செய்கிறது. கிளியை முன் கையில் ஏந்தித் "தலைவனை இன்று வருவார்" என்பாய் என மழலை பயிற்றுகிறாள். இதனை நம் இல்லுறை நமர் அறிந்து கொள்வார்களே என, அவர் அறிவதற்கு நாணத்தால் அஞ்சுகிறாள்; அதனால் அவளை "நாணுடை அரிவை"' எனப்பட்டது.

மேனி நலம் மட்டும் அன்றி, தலைவியிடம் வறியார்மாட்டு அருளுடைமை, விருந்தினரை ஓம்பல், வரவறிந்து செலவிடல் அட்டில் தொழிற்சிறப்பு முதலிய எல்லா நற்குண நற்செயல்களை உள்ளடக்கிய நலங்கள் யாவும் துய்த்து மகிழத் துடிக்கும் நெஞ்சம் அல்லவா தலைவன் உள்ளம். அதனால் மாட்சிமைப்பட்ட உள்ளத்தால் "மாணலம் பெற' என அவள் அருமைப் பாட்டை எண்ணி விரைவாகத் தேரைச் செலுத்தச் சொல்வதாக பாட்டின் பொருள்.

"மனைத் தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான்
வளத் தக்காள் வாழ்க்கைத் துணை"

என்ற வாய்மொழி நினைந்து இன்புறுக!

பயன்

மகளிரிடத்தில், நாணம் இன்றியமையாப் பண்பு என்பதும், இல்லறத்திற்குரிய மாண்புகள் நிறைய வேண்டும் என்பதும், தலைவிபால் நாணும் மாண்பும், தலைவனால் எதிர்ப்பார்க்கப்படுவன என்பதும், மனைவி மக்களோடு வாழ்வது பெருந்தகைமையே எனினும், பொருளீட்டுதல் இன்றியமையாதது வாழ்வு நடத்த என்பதும் பிறவும் இப்பாவால் நாம் அடையும் பயன்களாம். o

---

(40- ஆம் பக்கத் தொடர்ச்சி)

வகைத் திறனுய்வுக்காகவோ, வழக்காடாற்காகவோ எழுதியது அன்று. இதோ, நாங்கள் அணியம் ஆகி விட்டோம். 13.2.82 அன்று உ.த.மு.க. கொடியை அறிமுகப்படுத்தி விட்டோம். கொள்கையைப் பரப்பத் தலைப்பட்டு விட்டோம். இது தேர்ந்த தெளிவு -தெளிந்தார் கண் இல்லை ஐயுறவு! - வாருங்கள் தோழர்களே -வளத்தைச் சேருங்கள் தோழர்களே!

—'தமிழ்ச்சுடர்' மணிமுத்து. பழனி 2

www.thamizham.net - Free E book No 7520

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

0: 917: பேரன்புசால் ஐயா, வணக்கம். 'தமிழ் நாட்டின் தமிழ்த்தெருவில் தமிழ்தானில்லை' என்ற பாவேந்தரின் முழக்கத்தைத் தொடர்ந்து முழக்கிச் செயற்படுத்த எந்தத் தமிழ், திராவிடக்கட்சிகளும் முன்வராதது மட்டுமன்று. கடந்த காலங்களை விட எல்லாக் கட்சியினருமே அவரவர் சாதி மாநாட்டு மேடைகளிலேறித் தங்கள் சாதியினரின் அளவுக்கேற்பப் பள்ளி முதல் அமைச்சரவை வரை இடம் பிடிப்பதையே அவர்களின் கட்சித் தொண்டாகப் பறைசாற்றி வருகிறார்கள். விழுப்புரங்களையும், நாகர்கோயில் துமுக்கிச் சூடுகளையும் நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக வளர்ப்பதையே மாந்த உரிமை என்று ஆர். எசு. எசு. காரர்களும், கிறித்தவர்களும் முகமதியர்களும் கூச்சலிடுகின்றனர். இவர்கள் எந்த நாட்டில் வாழுகிறோம் என்பதைக்கூட மறந்துவிட்டார்கள். இங்கே தமிழறிந்த தமிழர்கள்தான் ஆளுகின்றார்களா? எல்லோரையும் சமமாகக் கருதும் சமவுடைமை நாடுகளிலே சிறுபான்மையோர் உரிமையெனத் தனியாக எதுவும் கிடையாதென்பதை இவர்கள் எல்லாம் உணர வேண்டும்; சமவுடைமை நாட்டு அரசு தம் நாட்டின் தலைநகரில் உள்ள தலைமை நூல்நிலையத்திற்கு மட்டுமே பிற, நாட்டு இன, மத மொழி, இலக்கியங்களையும்; செய்தித் தாள்களையும் வருவித்து அந் நாட்டு மக்கள் யாவரும் படிக்க வாய்ப்பு கொடுக்கிறது எனபதை இவர்கள் (நந் தமிழ்நாட்டு சிறுபான்மையோர்) உணரட்டும்.

—**தென்மொழி ப. முருகவேள், சென்னை - 88**

0: 918: அன்பும் அருளுமுள்ள ஐயா, நெஞ்சு நிறைந்த வணக்கங்கள். கழகத்துக்கென்று ஒரிதழ் தொடங்க முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என்கின்ற அறிவிப்புக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன், மிக விரைந்து செயல்பட வேண்டிய ஒன்று இது. இவ்விதழ் தொடக்கத்தில் கிழமை இதழாக வெளிவந்தால்கூட போதும். ஆனால், இதன் தோற்றமும், அமைப்பும் பழைய 'திராவிட நாடு' இதழ் போன்றுவது இருந்தால்தான் செய்தித்தாள் என்னும் கவர்ச்சியைப் பெறும். அஃதன்றித் தென்மொழி போன்ற பொத்தக அமைப்பில் வருமானால், இந்த ஏமாறிய தமிழ மாந்தக் கூட்டம் 'பச்சை' மணக்கும் புல்லரிப்புப் புலனங்களை எதிர்பார்த்து இன்னும் ஏமாறும். தோற்றத்திலும் இயல்பிலும் செய்திகளைத் தரும் செய்தித் தாளாகவே இருந்தால் நலம். எவ்வாறேனும் வெளிக்கொணர முயலுங்கள். நம் கழகச் செயற்பாடு சிற்றூர்ப்புறங்களில் தொடங்கப் பெறல் வேண்டும் என்று சொன்னீர்கள், திருச்சி செயற்குழுவில். ஆனால் அதற்கான அறிகுறியே தென்படவில்லை. சொல்லுங்கள்; ஆணையிடுங்கள். அதுபோன்ற செயல்களுக்கு வருவேன். சிற்றூர்ப்புறங்கள் தென்மாவட்டங்களில் மதுரை, முகவை, நெல்லை, குமரி தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். அவைதாம் எல்லா நிலையிலும் 'வறட்சி'யுடையவை,

www.thamizham.net - Free E book No 7520

அவ் வறட்சி நீங்க ஒரு தூண்டுகோலாகவாவது இருப்போம். விரைவில் முடிவினை மேற்கொண்டு அறிவியுங்கள்.

— கி. இளஞ்சேரல் முதுபாண்டியன், மின்பாறை

0: 919: தேன்மொழியன்ன தென்மொழி புரக்கத் - தென்மொழி என்ற தேனிதழ் நடத்தி – "உன்னகம் ஈது! உன் திறல் ஈது - உன் மொழி இத்தகு உயர்வைக் கொண்டது" என்றிம் மாந்தரை எழுப்பிட வந்த, குன்றே! வணக்கம். கோவே வணக்கம்!

உ.த மு.க. மாநாட்டு மலர் தந்த மகிழ்ச்சி - வெடிக்க வொண்ணு ஒன்று. எனினும் உ.த மு க. மாநாட்டிலேயே நம் இயக்கம் தோன்ற வேண்டிய தேவை - நாம் கைக் கொள்ள வேண்டிய கட்டுப்பாடு - நம் குறிக்கோள் முதலானவை, விரிவாக விளக்கப் பெற்றிருந்தும் பல அன்புள்ளங்கள் தத்தமக்குத் தோன்றிய உரைகள் அமைப்பு பற்றிய ஐயப்பாடுகள், தன்னம்பிக்கையின்மை (எ.கா: மடல் 887) பல மெய்த்தொண்டர்களிடையே சிலரை மட்டும் சுட்டிப் பெயர்கூறி மற்றவர்களின் மனத்தையோ, உழைப்பையோ, ஊக்கத்தையோ குறைத்து மதிப்பிடும் பாங்கு (எ. கா; மடல் 883) முதலானவற்றைக் கண்டு மெய்யாகவே வருந்துகிறேன்.

புதுமைக் கனல் பூத்திருக்கும் உள்ளங்களை முதலில் ஒன்று திரட்டுவோம். தன்னலமற்ற பதவிவெறி, பணவெறி, பெயர்வெறி வேண்டாத, மொழி நலம், பொதுமைநலம், நாட்டுநலம் நாடும் இயக்கத்தை வளர்ப்பது - அதை எளிய மக்கள் முன் கொண்டு செல்வதே நம் குறிக்கோள். 'சொல்லுதல் யார்க்கும் எளியவாம்' என அமையாமல் நம் அன்பர்கள் ஒவ்வொருவரும் தத்தம் வட்டங்களில் இயக்கத்தைப் பொதுக்கூட்டங்களாலும், சிற்றறிக்கைகளாலும் பரப்ப அணியம் ஆவோமாக. புதிய உலகம் திடீரென்று பூத்து விடாது. அது பொறுமையின் கருவில் பொலிந்து - வளர்ந்து - கனன்று - செழித்துப் பொங்கி வருவதாம். எனவே நம் தோழர்களுக்கு அவ்வப்போது செயலாற்றும் வழிவகைகளைக் கூறி, படையணியை அணியம் செய்யும் பாங்கில் நடத்துங்கள்.

இயக்கம் வளர்வதன் முன்னமேயே கொண்ட கொள்கையின் தன்மை - வண்மை - மென்மை - எதிர்கால நிலைமை குறித்து வழக்காடு மன்றம் தோன்றிவிட வேண்டாம் என மன்றடிக் கேட்டுக் கொள்கிறேன். சிற்றூர் தோறும் நம் இயக்கம் பரப்பி மற்ற 'அரசியலார் பிடி' யெனும் மயக்கில் இருக்கும் மாந்தர்க்கு அறிவுத் தெளிவை உண்டாக்க வேண்டும். மொழிச் செப்பத்துக்கு எத்துணைச் சிறப்பிடம் அளிக்கிறோமோ அத்துணையளவு, மாந்தர்தம் அன்றாட வாழ்வியற் சிக்கல்கள், பொருளியற் சிக்கல்கள், பண்பாட்டுச் சிக்கல்களுக்கு முகாமை யளித்துத் தீர்வு காண நிற்போம். நம் இயக்கம் தானாக வளரும், ஊர்நாடு பழமரம் போலே. என் மனதில் பட்டதை நம் தோழர்களுக்கு உரைக்கவே இந்த மடல். மற்று, எவ்

—தொடர்ச்சி 38- ஆம் பக்கம் பார்க்க

www.thamizham.net - Free E book No 7520

இன்றைய உலகில் ஒரு செயலைச் சீரியமுறையில் திறம்படச் செய லாக்க முடியும்? ஒவ்வொரு செயலுக்கும் அதே அளவில்தான் எதிர்ச் செயல் உண்டு என்பது இவ்வுலக இயக்க நெறி. இந்த இயக்க நெறியைக் கண்டு கொள்ளாமல் எவ்வாறு ஒருவன் இவ்வுலகில் இயங்க முடியும்? நடைமுறைக்கு ஒவ்வாத இவ்வரட்டு மெய்ம்மத் தையே தன்னுடைய கருப் பொருளாகக் கொண்டது கீதை.

ஒருவனுடைய தொழில் வேறு. அவன் இவ்வுலகுக்கு ஆற்ற வேண்டிய கடமை வேறு என்று பிரித்துக் காண்பித்து,

கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு.

என்று ஒப்புரவை மாந்த வாழ்வின் முன் நிறுத்துவது இனிய குறள்.

அறம், பொருள், காமம் சேர்ந்ததே உலக வாழ்வு. காமத்தை விடுத்த உலக இயக்கம் எங்கும் இல்லை. வள்ளுவம் காண்பிக்கும் காமம் எத்தகையது?

மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்.

இதுபோன்ற காம இயல் காமகோடி மடத்துக்கு எட்டும் என்று நாம் எதிர்பார்க்க முடியாதுதான். வெறூஉம் காமத் தினவுகளைப் பெருக்கிக் காண்பிக்கும் திரைப்படங்கள்தாம் இம் மடத்துக்கு எட்டு கின்றன போலும்! ஆயின், அறியாமையின் எல்லையில் இருந்து கொண்டு திருக்குறள் குறித்த தம்முடைய பேதைமை உரைகளை அறி வுரைகளாக இச் சின்னப் பெரியவாள் விடுக்க முற்பட்டது, இந்நூற் றுண்டின் இணையற்ற கோமாளித்தனம் என்பதைத் திருக்குறள் அறிந்தோர் தெரிந்து கொள்வர்.

— **க. சி. அகமுடையநம்பி, பொறி. இ.** அருப்புக்கோட்டை.

0: 914: ஐயா, வணக்கம். தங்கள் தென்மொழி இதழ்களைத் தொடக்கக் காலத்திலிருந்தே இடைவிடாது தொடர்ந்து படித்து வரு பவர்களில் யானும் ஒருவன். சென்ற இதழில் வந்துள்ள (சுவடி 18: ஓலை 7. 0: 893) கடிதம் தங்களின் முழு ஒப்புதலோடுதான் வெளி யாகியிருக்கும் என்று எண்ணுகிறேன். அம் மடல் எழுதிய நண்பர் 'பர். பொற்கோ போன்ற தமிழ்மொழிப் பகைவர்கள்' எனத் திரு. பொற்கோ அவர்களுக்கு ஒரு பட்டத்தைக் கொடுத்துள்ளார். திரு. பொற்கோ போன்ற மொழி நலமும், இனநலமும் அறிவுநலமும், பண்புநலமும் சான்ற பேராசிரியர் மீது எவ்வகைக் காரணியமும் காட்டாது சேற்றை வாரி இறைப்பதைப் போன்று சிலர் எழுதுவதும் அதனைத் தாங்கள் வெளியிடுவதும் எந்த வகையிலும் எவர்க்கும் பய னுடைய வல்ல. மேலும், இவர் தமிழ்மொழிப் பகைவரெனின் தக்க சான்று காட்டி நிறுவுதல் வேண்டும். அறிவுடையார் எனப்படுபவர் செய்கின்ற செயல் அதுதான். அதில் உண்மை இருப்பின் ஏற்றுக் கொள்வோம் (உண்மை இருந்தால்தானே அவ்வாறு எழுத முடியும்.) அவ்வாறன்றி வீணே தாக்கி எழுதுவது என்பது, ஒன்று எழுதுவோ ரின் பேதைமையாக இருக்க வேண்டும்; இல்லையெனில் பொறாமையாக இருக்க வேண்டும். திரு. பொற்கோ போன்ற நடுவுநின்ற நன்னெஞ் சும், ஒருபாற் கோடாத ஆய்வுத்திறனும், பரந்துபட்ட பல்வேறு நூலறிவும், மொழிப்புலமையும் வாய்ந்தார் இன்றைய தமிழகத்தில் மிகச் சிலரே; இதனைத் திருப்பாற்கடலாரும், அவர்தம் திருக்கூட்டத் தாரும் இன்று உணராவிடினும், காலம் ஒருநாள் இவ்வுண்மையினை அவர்க்கு உணர்த்தும்.

www.thamizham.net - Free E book No 7520

0: 915: தமிழினத்தின் விடிவெள்ளியாம் பாவலரேறு ஐயா அவர்கட்கு வணக்கங்கள் பல. நான் தென்மொழி இதழைச் சில காலம், குடும்பச் சுழலில் இறங்கித் துன்புற நேர்ந்தமையால் சுவைக்க வழியில்லாமை நேர்ந்து விட்டது

அதைத் தற்பொழுது தாங்கள், உடுமலை, தென்மொழியன்பர், (உ.த.மு.க. செயலர், உடுமலை வட்டம்) திரு. அறவாழி அவர்களின் தமக்கையின் மணவிழாவில் கலந்து உரையாற்றும் பொழுது அறவாழி அவர்கள் தங்களிடம் அறிமுகம் செய்வித்தார். அன்று முதல் இன்றுவரை நான் மீண்டும் தென்மொழி இதழைத் "தமிழ்ச்சுடர்" ஆசிரியர் மணிமுத்து அவர்கள் மூலம் பெற வாய்ப்புக் கிட்டியது. என்னுடைய அகவையெல்லாம் குறைந்த அகவையே! ஆதலின். பலரின் வாயிலாக முன்னே வெளிவந்து கொண்டிருந்த 'தமிழம்' 'தென்மொழி', 'தமிழ்ச்சிட்டு' இதழ்களைப் படித்து என் ஆசையைப் பெருக்கிக் கொண்டேன்.

தங்களின் சுவடி: 18, ஓலை: 8 இதழில் ஆசிரியப் பா படித்தேன், என் நெஞ்சுள்ளே புதுத் தெம்பு பிறந்தது. தாங்கள் தொடங்கியுள்ள உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் மட்டும் ஒரு நல்ல பேரியக்கமாக உருவானால், திராவிடத் தலைவர்களான பெரியார், அண்ணா, ஆகியோர்ப் பற்றி அவதூறு பேசியவர்கள்- கள்ளம், கரவு வைத்துத் திரிகின்றவர்கள், நாளை உள்ளத்தில் உறவு கொண்டாடித் தங்களிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கோர நேரும். என் போன்ற தமிழின வெறியர்களுக்கு அமிழ்தமென இருக்கும். ஆசிரியவுரை இப்படி அமைந்தால்தான் புரட்சிக்கனல் தெறிக்கும். நம்மைப் பார்த்து ஓடும் நரிகளின் வாய் மண்ணைப் பறிக்கும். தென்மொழி இன்னும் தீவிரம் அடைய வேண்டும்; என் போன்றோர்க்கு நாவினில் தனித் தமிழ் ஊறிட வேண்டும். பொறுப்பு அமர்த்தச் சுற்று வரும் பொழுது முடிந்தால் பழனி வாருங்கள். தாங்கள் தாம் மாநாடு சிறப்பாக நடத்தினோம் என்று நினைக்கும் பார்ப்பன நரிகளுக்கு - நல்ல சொல்லடி தாருங்கள்.

பழனி வட்டத்தில் சமசுக்கிருதப் பள்ளிகள் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. மணிமுத்து அவர்களிடம் சொல்லி வையுங்கள். தனித் தமிழில் எழுத, பேசத் துடிக்கிறேன். முயற்சி வெற்றி கிட்டும் என நம்பும்,

—**பூண்டி மறவன்,** அமரர்பூண்டி.

0: 916: அன்பு சான்ற ஐயா அவர்களுக்கு, வணக்கம்... குலவெறி, மதவெறி, கட்சிவெறி, என்னும் அழிவுநோய்களால் தேய்ந்து வரும் இத் தமிழ்க்குமுகாயத்தைத் தமிழ்ப்பற்று இனப்பற்று, பொதுமைப்பற்று எனும் மருந்துகளைத் தென்மொழி, மூலமாகவும் இன்மொழி மூலமாகவும் தொடர்ந்து எதற்கும் தளராது தாழாது அளித்துக் காக்க முயன்று வரும் தங்களை என் உளமாரப் பாராட்டுகிறேன். தங்களின் முயற்சிகளைத் தமிழினம் என்றும் போற்றும். தங்கள் முயற்சிகள் வெல்லும். தங்களின் முயற்சிகள் வளரட்டும், தொண்டுகள் பரவலாகட்டும். புகழ்மலை பெருகட்டும். எல்லா நலனும் வளனும் ஓங்க வாழ்க! என் இனிய பொன்விழா வாழ்த்துகள்.

—**க. தமிழமல்லன், க. இ, கல். இ.** புதுச்சேரி-9

(தொடர்ச்சி 39-ஆம் பக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No:7520